விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 03.05.2021 திங்கட்கிழமை | இதழ் : 153 | பக்கங்கள் : 16




ஒரு தசாப்தத்தின் பின்னர் தமிழகத்தில் மீண்டும்

# ஆட்சி அமைக்கிறது தி.மு.க. முதல்வராகிறார் ஸ்ராலின்!

## சொற்ப வாக்குகளால் கமல்ஹாசன் தோல்வி

## மூன்றாவது அணியாக சீமானின் 'நாம் தமிழர்'



சென்னை, மே 03,

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி பெரிய அளவில் வெற்றியடைந்துள்ளது. இதனால், தனிப் பெரும்பான்மையுடன் திமுக ஆட்சி அமைக்கின்றது. அதன் தலைவர் மு.க. ஸ்டாலின் தமிழக முதல்வர் ஆகிறார். ஒரு தசாப்த கால அதிமுக ஆட்சியின் பின்னர் தி.மு.க. மீண்டும் தமிழகத்தில் ஆட்சி அமைக்கின்றது.

15



## புத்தர் சிலை உடைப்பு யாழில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 03

புத்தர் சிலையை உடைத்த குற்றச்சாட்டில் ஒருவரை காங்கேசன்துறை பொலிஸார் கைது செய்தனர்.

காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்துக்கு அண்மையில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

காங்கேசன்துறை கடற்படையினர் வழங்கிய தகவல் அடிப்படையில் பொலி

15

## தமிழ் உணர்வாளர் அமைப்பு தலைவர் ரி.ஐ.டி.யால் கைது

மட்டக்களப்பு, மே 03

தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் . நேற்றிரவு 8 மணியளவில் செங்கலடியில் வைத்து ஏறாவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் .

முகப்புத்தகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்பான பதிவுகள் 'ராக்' (tag ) செய்யப்பட்டமை - அனுப்பப்பட்டமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

விதிகளை மீறி திருவிழா:

## காரைநகர் தன்னை பிள்ளையார் ஆலய நிர்வாகி, பூசகர் தனிமை

யாழ்ப்பாணம், மே 03

சுகாதார விதிகளை மீறி அதிகளவில் மக்களை கூட்டி திருவிழா நடத்தியமைக்காக காரைநகர் களபூமி தன்னை பிள்ளையார் கோவிலின் நிர்வாகி, பூசகர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் ஆலயத்தில் பூசைகளும், வழிபாடும் இரு வாரத்துக்கு

15

## 9 கொரோனா மரணங்கள் நேற்று பதிவு

கொழும்பு, மே. 03

இலங்கையில் நேற்று மட்டும் 9 கொரோனா தொற்றாளர்கள் மரணமடைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையில் கொரோனாவினால் மரணமடைநதவர்களின் எண்ணிக்கை 696 ஆக அதிகரித்துள்ளது.

## என் சிந்தனையும் செயலும் நாட்டு மக்களுக்காகத்தான்

வெற்றிபெற்ற ஸ்ராலின் உணர்வுபூர்வ அறிவிப்பு

சென்னை, மே 03

"திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆறாவது முறை ஆட்சியைச் செலுத்தக் கட்டளையிட்டுள்ள தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் இதயங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி" என்று

15

## சிறைச்சாலைகளில் 246 தொற்றாளர்கள்

கொழும்பு, மே 03

கொரோனா வைரஸ் சிறைச்சாலையினுள் பரவாமல் தடுப்பதற்காக சிறைச்சாலை சுகாதாரப் பிரிவு மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து விஷேட வேலைத்திட்டமொன்று

15

## வடமாகாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மே 03

வடக்கு மாகாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று ஞாயிற்றுக்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 478 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 7 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

15

கிழக்கு மாகாண சபை தேர்தல்:

## கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஒன்றிணைந்து போட்டியிட பேச்சு!

மட்டக்களப்பு, மே 03

தமிழ், முஸ்லிம் சக்திகள் ஒன்றிணைந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தெரிவித்தன.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் கருத்துத் தெரிவித்தார்.

15

## வேகமாக பரவும் கொரோனா 1,891 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு,மே 03

இலங்கையில் நேற்றைய தினம் மேலும் 1,891 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். ஒரேநாளில் அடையாளம் காணப்பட்ட அதிகளவு எண்ணிக்கையாக இதுவே உள்ளது.

இவர்கள் அனைவரும் புதுவருட கொரோனா கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் தெரிவித்தார். இதனடிப்படையில் இலங்கையில் இதுவரையில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டோர் தொகை ஒரு

15

அச்சுறுத்தும் மூன்றாவது அலை!

## 58 கிராமசேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, மே 03

நாட்டில் தற்போது கொரோனா தொற்று மூன்றாவது அலையின் அச்சுறுத்தல் காரணமாக 3 மாவட்டங்களில் 7 பொலிஸ் பிரிவுகளும் 12 மாவட்டங்களில் 58 கிராம சேவகர் பிரிவு

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சி அமைக்கிறது...

ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி பெரும் பரபரப்புக்கும், எதிர்பார்ப்புக்களுக்கும் மத்தியில் நேற்றுக்காலை ஆரம்பமான போதே தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெறும் என்பது உறுதியாகியது.

தமிழகத்திலுள்ள 234 தொகுதிகளில் 117 தொகுதிகளில் வெற்றிபெற்றாலே ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலையில், 159 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி நேற்றிரவு முன்னணியில் இருந்தது. அ.தி.மு.க. கூட்டணி 75 தொகுதிகளில் முன்னணியில் இருந்தது. இந்தத் தொகுதிகளில் அவை வெற்றிபெறும் என்பது பெரும்பாலும் உறுதியாகியிருந்தது.

தி.மு.க. கூட்டணியிலுள்ள காங்கிரஸ் 17 இடங்களிலும், ம.தி.முக. 4 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 4 இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

அ.தி.மு.க. கூட்டணியில் பாமக 5 இடங்களையும், பா.ஜ.க. 4 இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

திராவிடக் கட்சிகளுக்கு மாற்று, தமிழ்த் தேசியம் என அடிப்படைக் கொள்கைகளை வகுத்துக்கொண்ட நாம் தமிழர் கட்சி, வழக்கமான அரசியல் பாதையிலிருந்து விலகி, தனித்து போட்டியிட்டு அதிகளவு வாக்குகளைப் பெற்ற கட்சி என்ற நிலையில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இருந்தபோதிலும், இதன் தலைவர் சீமான் உட்பட 234 வேட்பாளர்களும் தோல்வியடைந்தனர்.

பிரபல நடிகர் கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் இத்தேர்தலில் எந்தளவுக்கு ஆதரவைப் பெறும் என்ற பலத்தை எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஓர் ஆசனத்தைக் கூட பெறமுடியாமல் தோல்வியைத் தழுவியுள்ளது. கோவை தெற்கில் ம.நீ.ம.வின் தலைவர் கமல்ஹாசன் தோல்வியடைந்துள்ளார் பா.ஜ.க. வேட்பாளர் வானதி ஸ்ரீனிவாசனுடன் கடும் போட்டியை எதிர்கொண்ட கமல்ஹாசன் 1,439 வாக்குகளால் தோல்வியடைந்தார். 52256 வாக்குகளை வானதி ஸ்ரீனிவாசன் பெற்றுக்கொண்ட அதேவேளையில், 51,087 வாக்குகளை கமல்ஹாசன் பெற்றிருந்தார்.

தேர்தலில் பெரு வெற்றியைப் பெற்றுள்ள தி.மு.க. ஆட்சி அமைப்பதற்கான உரிமையைக் கோருவார்கள். அதன் சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூடி தமது தலைவராக ஸ்ராலினை உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்வார்கள். அது குறித்து ஆளுநருக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் பதவியேற்புக்கு ஸ்ராலின் ஆளுநரால் அழைக்கப்படுவார்.

## 58 கிராம...

களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றுக் காலை 6 மணி முதல் கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் அதிகாரப் பிரிவு, திருகோணமலை மாவட்டத்தின் உவர்மலை, மற்றும் அன்புவழிபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள், களுத் துறை மாவட்டத்தில் பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வடக்கு வேகட, கிரிபேரிய மற்றும் கிழக்கு பாலமுல்ஸ கிராமசேவகர் பிரிவுகள் மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் நீலதண்டாஹின்ன கிராம சேவகர் பிரிவு ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

குருணாகல் மாவட்டத்தில் குளியாபிட்டி பொலிஸ் பிரிவு கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை தனிமைப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் இம் மாவட்டத்தின் பன்னல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதி கடந்த 30 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 14 ஆம் திகதி வரை தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. கடந்த 30 ஆம் திகதியிலிருந்து மாத்தளை மாவட்டத் தில் தம்புள்ளை, கலேவெல, மாத்தளை மற்றும் நாவெல பொலிஸ் பிரி விற்குட்பட்ட பகுதிகள் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

தற்போது குருணாகல் மாவட்டத்தில் 05 கிராம சேவகர் பிரிவுகள், களுத்துறை மாவட்டத்தில் 16 கிராம சேவகர் பிரிவுகள், கம்பஹா மாவட்டத்தில் 04 கிராம சேவகர் பிரிவுகள், திருகோணமலை மாவட்டத்தில் 07 கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் காலி மாவட்டத்தில் 04 கிராம சேவகர் பிரிவுகள் ஆகியன தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

பொலன்னறுவை மாவட்டத்தில் 02 கிராம சேவகர் பிரிவுகள், மாத்தறை மாவட்டத்தில் 03 கிராம சேவகர் பிரிவுகள், அம்பாறை மாவட்டத்தில் 03 கிராம சேவகர் பிரிவுகள், மொனராகலை மாவட்டத்தில் 05 கிராம சேவகர் பிரிவுகள், கொழும்பு மாவட்டத்தில் 02 கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் 01 கிராம சேவகர் பிரிவு ஆகியன தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

## என் சிந்தனையும்...

தி.மு.க. தலைவரும் முதல்வராகப் பொறுப்பேற்க இருக்கிறவருமான மு.க.ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் தி.மு.க.வின் வெற்றியை உறுதீப்படுத்தியுள்ள நிலையில், நேற்றிரவு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஸ்ராலின் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:

“மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு” என்றார் நம்மை எல்லாம் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள். “ஜனநாயகத்தில் ஜனங்களே எஜமானர்கள்“ என்றார் நமக்கு எல்லாம் உணர்ச்சியை ஊட்டிய முத்தமிழறிஞர் கலைஞர்.

தமிழ்மொழிக்கும் - இனத்துக்கும் - நாட்டுக்கும் காவல் அரணாக உருவாக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆறாவது முறை ஆட்சியைச் செலுத்தக் கட்டளையிட்டுள்ள தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் இதயங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்திடம் தமிழகத்தை ஒப்படைத்தால் நாடும், நாட்டு மக்களும் நலமாக இருப்பார்கள் என்பதை உணர்ந்து மக்கள் தங்களது மகத்தான ஆதரவைக் கழகக் கூட்டணிக்கு வழங்கியுள்ளார்கள்.

தமிழகத்தில் ஐந்து முறை ஆட்சி செலுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் வாழ்ந்த காலத்திலேயே, கழக ஆட்சியை மலர வைக்க வேண்டும் என்று நினைத்தோம். ஆனால் காலம் முந்திக் கொண்டு விட்டது. அந்தக் கனவை நிறைவேற்றியாக வேண்டும் என்ற துடிப்புடன் ஒவ்வொரு நாளும் செயல்பட்டோம். அந்த உழைப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் தான் மக்கள் தந்துள்ள இந்த மாபெரும் வெற்றியாகும்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டுக்கு இயக்க ரீதியாகவும் - ஆட்சி ரீதியாகவும் உழைத்த நமது உழைப்புக்குக் கிடைத்த பாராட்டுப் பத்திரமாக நினைத்து இதனைப் பாதுகாப்பேன். நமது உழைப்புக்குத் தரப்பட்ட அங்கீகாரமாக இதனை நினைக்கிறேன்.

எத்தனை சோதனைகள் - எத்தனை வேதனைகள் - எத்தனை பழிச்சொற்கள் - எத்தனை அவதூறுகள் - என கழகத்தின் மீது வீசப்பட்ட அனைத்தையும் தங்களது வாக்குகளால் ஓரங்கட்டிய மொத்தத் தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்றி! நன்றி! நன்றி! உங்களுக்கு உண்மையாக இருப்பேன்! உங்களுக்காக உழைப்பேன்! என்றென்றும் என் சிந்தனையும் செயலும் இந்நாட்டு மக்களுக்காகத்தான்!

தமிழகத்தில் அமையப் போகும் கழக ஆட்சியானது, எத்தகைய கனவுகள் கொண்டதாக தமிழகம் அமைய வேண்டும் என்று நினைப்பவர்கள் அனைவரும் சேர்ந்து நடத்தப் போகும் ஆட்சியாகும்” என்று குறிப்பிட்டுள்ளார் ஸ்ராலின்.

## புத்தர் சிலை...

ஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர் மதுபோதையில் புத்தர் சிலையை உடைத்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்தது. சந்தேக நபர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (எ)

# ரிஷாத்துக்கு ஆதரவாக போராட்டம்! கட்டாய பி.சி.ஆர். செய்த பொலிஸார்

கல்முனை, மே 03

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனைத் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்து அரசியல் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்காமல் அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோஷத்துடன் கல்முனை மாநகரில் நேற்று மாபெரும் கண்டனப் போராட்டம் முன்னெடுக்க ஆயத்தமான நிலையில் சிலருக்கு எதிராகத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கல்முனை நீதிவான் நீதிமன்றத்தால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.எம்.ஏ. ஜவாத், பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனை அமைப்பாளர், கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.அப்துல் மனாப், கல்முனை மாநகர சபை உறுப்பினர் வை.கே ரஹ்மான், கல்முனை மாநகர சபை உறுப்பினர் பீ.எம். ஷிபான், கலில் முஸ்தபா, உயர்பீட உறுப்பினர் மான்குட்டி ஜுனைதீன் ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தத் தடை உத்தரவை கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் கே.எச். சுஜித் பிரியந்த பெயர் குறித்தவர்களிடம் கையளித்தார்.



நீதிமன்ற உத்தரவையும் மீறி கல்முனை நகர் மத்தியில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் அம்பாறையின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த மக்கள் பிரதிநிதிகள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

தலைவர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய், ரிஷாத்தை அநீதியான முறையில் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைத்திருக்காதே!, ரிஷாத்தை நள்ளிரவில் கைது செய்ததன் பின்னணி என்ன?, யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கைது? போன்ற சுலோக அட்டைகளை ஏந்தி கோஷமெழுப்பிய போது கல்முனை பொலிஸார் புகுந்து இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததுடன் சுலோகங்களை பறித்து போராட்டக்காரர்களுக்கு கட்டாய பி..சி.ஆர் பரிசோதனை செய்தனர்.

கல்முனை பொலிஸாரின் கெடுபிடியால் அங்கிருந்து வெளியேறி சென்ற போராட்டக்காரர்கள் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளியில் சமூக இடைவெளிகளைப் பேணிப் போராட்டத்தை மீண்டும் தொடர்ந்து மேற்கொண்டனர்.

இதன் போது ரிஷாத்தின் கைதுக்கு எதிராகவும், அரசுக்கு எதிராகவும் போராட்டக்காரர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன. (எ)

## வட மாகாணத்தில்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் 2 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர்.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது. பூவரசம்குளம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, மல்லாவி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற ஒரு நோயாளிக்கு தொற்று கண்டறியப்பட்டது.

பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது என்றும் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-03)

## கூட்டமைப்பு...

தற்போது தேர்தல் நடத்தினால் தோற்றுவிடுவோம் என்ற அச்சம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

மேலும், “தமிழ் பேசுகின்ற மக்கள் ஒன்றிணைந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளோம். தமிழ் மக்கள் மாத்திரமல்லாது தமிழ் பேசுகின்ற முஸ்லிம் மக்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

தமிழ் பேசுகின்ற மக்களாக நாங்கள் ஒன்றிணைந்து, கிழக்கு மாகாணமும் தமிழ் பேசுகின்ற மாகாணம் என்ற ரீதியில், அதன் அடையாளத்தை பேணும் வகையில், நாங்கள் ஆட்சியைக் கைப்பாற்றுவோம் - என்றும் கூறினார்.

இது தொடர்பில் ஆரம்ப கட்ட பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. அதனை தமது கட்சி பரிசீலிப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தை தமிழ் பேசும் மக்கள் கைப்பற்ற வேண்டிய தேவை இருப்பதனால், தமிழ் முஸ்லிம் சக்திகள் ஒன்று சேர்ந்து தேர்தலை எதிர்கொள்வது தொடர்பிலேயே பேசப்பட்டது. எனினும் அந்தப் பேச்சில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. எனினும், இதனை சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## காரைநகர்...

இடைநிறுத்தப்பட்டுள்ளன.

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை உத்தியோகத்தர்கள் பலமுறை அறிவுறுத்தியும் அதை மீறி மக்களை அதிகளவில் ஒன்றுகூட்டி திருவிழாவை நடத்தினர் என்று ஆலயத்தினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை விதிமுறைகளை மீறி பூசை நடத்திய ஆலயத்தினரை பொலிஸ் அதிகாரிகள் கடுமையாக எச்சரித்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வேகமாக...

இலட்சத்து 11,700 ஐ தாண்டியுள்ளது.

நேற்றைய தினம் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 48 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்திருந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நாட்டில் இதுவரை கொரோனா தொற்றிலிருந்து 97 ஆயிரத்து 242 பேர் பூரண குணமடைந்தனர். மேலும், கொரோனா தொற்றுக்குள்ளாகி 687 பேர் உயிரிழந்தனர். (எ)

## சிறைச்சாலைகளில்...

செயல்படுத்தப்பட்டுள்ளது என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதன்படி, சிறைச்சாலைகளில் வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

கொரோனா மூன்றாவது அலையில் சிறைச்சாலைகளில் 246 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

சிறைச்சாலைகளுக்கு புதிதாக வரும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறைக் கைதிகளுக்கு தொடர்ச்சியாக பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

ஒருவருக்கு வீட்டில் தொலைபேசி 'பில்' அதிகமாக வந்தது.

அவர் தன் மனைவியிடம் கூறினார் "நான் நண்பர்கள், உறவினர்களுக்கு போன் செய்ய அலுவலக போனை பயன்படுத்துகிறேன் நீதான் அதிகமாக பேசியிருப்பாய்" என்று கூறினார்.

ஆனால், அவர் மனைவியோ தானும் தான் வேலைசெய்யும் இடத்தில்தான் போன் பேசுகிறேன்.நம் மகன் அவனது நண்பர்களிடம் பேசியதால் 'பில்' அதிகரித்திருக்கலாம் என்றார் அவர் மனைவி.

மகனோ எனக்கும், "நான் வேலைசெய்யும் கம்பெனியில் போன் உண்டு அதிலிருந்துதான் நான் போன் செய்கிறேன்" என்றான்.

"நம் வீட்டில் வேலை செய்யும் பெண் ரெலிபோனை சுற்றிவருவதை பார்த்திருக்கிறேன்" என்றான் மகன்.

வேலைக்காரியோ, என்னை எதற்காக திட்டுகிறீர்கள் உங்களைப்போல நானும் வேலை செய்யும் இடத்திலிருந்துதான் என் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் போன் பேசுகிறேன் என்றாள்.!

சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான சாணக்கிய இராசமாணிக்கம் ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி, இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறுமானால் அதில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவேன் என்று தெரிவித்திருந்தார்.

நமது அப்புக்குட்டி அண்ணை, அவரின் இந்தக் கருத்தின் மூலம். அவர் இந்த மூன்றில் ஒரு விடயத்தைச் சொல்ல வருகிறாரா என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அப்புக்குட்டி அண்ணை அவரிடம் எழுப்பிய கேள்விகள் இவைதான்:

கூட்டமைப்பில நீங்களும் முடிவெடுக்கிற தலைவராக வந்திட்டியள் எண்டோ? அல்லது, வேற கட்சியில போட்டியிடப்போறன் எண்டுறியளோ?

அல்லது நடக்க முடியாத ஒரு விசயத்தைச் சொன்னால் தான் அரசியலில இருக்கும் வரைக்கும் சொல்லிக்கொண்டிருக்கலாம் எண்டு உங்கட நண்பர்கள் சொல்லித் தந்திட்டினமோ? இவைதான் அப்புக்குட்டி அண்ணை அவரிடம் எழுப்பிய கேள்விகள்.

ஆனால், இந்த அப்புக்குட்டி அண்ணையின் கேள்விகள் வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையின் அந்தப் பகுதியை சாணக்கிய, தனது முகநூலில் பகிர்ந்திருக்கிறார்.

நாம் பிறர் பதிவுகளை நமது முகநூலில் பகிர்ந்து கொள்கின்றோம் என்றால் அதன் அர்த்தம், அது நம்மை கவர்ந்திருக்கின்றது. அல்லது அது நமது கருத்தோடு ஒத்துப்போவதாக இருக்கவேண்டும்.

இதனை சாணக்கிய, பகிர்ந்திருப்பதன் மூலம் அந்த மூன்று கேள்விகளில் ஒன்றுடனாவது அவர் ஒத்துப் போகின்றவராக இருக்கவேண்டும்.

"வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடந்தால் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவேன்" என்றே அவர் தெரிவித்திருந்தார்.

கூட்டமைப்பு சார்பில் போட்டியிடுவதானால், அவர் எப்படித் தெரிவித்திருக்கவேண்டும்?

கட்சி கேட்டுக்கொண்டால் நான் போட்டியிடத் தயாராக இருக்கிறேன் என்றே அவர் சொல்லியிருக்கவேண்டும். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை. நான் போட்டியிடுவேன் என்று நான் சொன்னால் கட்சி சொன்னதுபோலத்தான் என்று அவர் சொன்னால், அவரும் கட்சியில் முடிவெடுக்கும் தகுதியை அடைந்துவிட்டார் என்று அர்த்தம்.

அல்லது, முன்னர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த பின்னர், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து, தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றதுபோல, எதிர்வரும் காலத்தில் வேறுஒரு கட்சியின் சார்பில் அல்லது அவரே விக்கினேஸ்வரன் போல தனியான கட்சியைத் தொடங்கி போட்டியிடவேண்டும்.

அதுவும் இல்லையெனில் வடக்கு, கிழக்கு இணைந்த சமஷ்டித் தீர்வுதான் தமது இலக்கு என்று அண்மையில் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

அவர் அவ்வாறு தெரிவித்திருந்தாலும், ஏற்கனவே இணைக்கப்பட்டிருந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களை நீதிமன்றின் உதவியுடன் ஜே.வி.பி. பிரிக்க முயன்றபோது, அந்த வழக்கில் தமிழர் தரப்பில் ஆஜராகிய சட்டத்தரணிகளில் ஒருவராகிய சுமந்திரனால் நீதிமன்றின் உதவியுடன் அதனை தடுத்து நிறுத்த முடியவில்லை.

இந்நிலையில் கிடைக்க முடியாத தீர்வு ஒன்றை நோக்கி குரல்கொடுத்தால்தான், தொடர்ந்து அந்தக் கோரிக்கைக்காக அரசியல் செய்துகொண்டிருக்கமுடிம். அதனையே அப்புக்குட்டி அண்ணே தனது 'டவுட்'டாக முன்வைத்திருந்தார்.

இவற்றில் ஒன்றையே சாணக்கிய இராசமாணிக்கம் ஏற்றுக்கொண்டிருப்பதால் அவர் எந்த விடயத்துடன் ஒத்துப் போகிறார் என்பதையும் சொல்லியிருக்கலாம்.

தனது எஜமானர்களைப் பின்தொடர்ந்த வேலைக்காரியின் கதைதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

**- ஊர்க்குருவி.**

# தமிழக முதல்வராக பதவியேற்கவுள்ள ஸ்டாலினை வாழ்த்தி வரவேற்போம்

## த.மு.கூ. தலைவர் மனோ கணேசன்



**கொழும்பு, மே 03**

**தமிழகத்தின் ஆளும் கட்சியாக பொறுப்பேற்க உள்ள திராவிட முன்னேற்ற கழகத்தையும், தமிழக முதல்வராக பதவியேற்க உள்ள தளபதி மு.க.ஸ்டாலினையும் வாழ்த்தி வரவேற்க தயாராவோம் என்று கூறியுள்ள, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி., தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு அனுப்பிவைத்துள்ள டுவீட்டர் செய்தியில், "தி.மு.க. கூட்டணியை வழிநடத்தி நீங்கள் பெற்றுள்ள மகத்தான வெற்றி உலகத்தமிழர்களின் பார்வையை உங்கள் மீது திருப்பியுள்ள நிலையில், எம் தந்தையர் நாடு தமிழகத்தின் முதல்வராக பொறுப்புகளை ஏற்கும் உங்களை இலங்கை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் என்ற முறையில் மனமாற வாழ்த்துகிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.**

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

தமிழக தேர்தல் முடிவுகளில் நேரடியாக தலையிட, நாம் அங்கே வாக்காளர்கள் அல்ல. ஆனால், அதுபற்றி நாம் கண்டுக் கொள்ளாமல் இருக்க முடியாது. என்னை பொறுத்த வரையில் இலங்கை எமது தாய்நாடு. இந்திய தமிழகம் எங்கள் தந்தையர் நாடு.

அறிஞர் அண்ணா உருவாக்கி, மறைந்த முன்னாள் முதல்வர், கலைஞர் முத்துவேலு கருணாநிதி வளர்த்து விட்ட திராவிட முன்னேற்ற கழகத்துக்கும், புரட்சி தலைவர் எம்.ஜி. ராமச்சந்திரன் உருவாக்கி, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் வளர்த்து விட்ட அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்துக்கும் இடையில்தான் ஆரம்பத்தில் இருந்தே பிரதான போட்டி. ஏனைய அனைத்து கட்சிகளும் துணை அரசியல் பாத்திரங்களையே வகிக்கின்றன.

தமிழக உடன் பிறப்புகள் தரும் ஜனநாயக முடிவுகளை ஏற்று அதை எப்படி எமக்கு பயனுள்ளதாக மாற்றிக்கொள்ள முடியும் என்பதை மட்டுமே, இலங்கையில் நாம் கணிக்க வேண்டும்.

இலங்கையில் வாழும் ஒட்டு மொத்த தமிழர் பிரச்சினை என்பது, தமிழக மக்கள் முன்னாலே உள்ள பல்வேறு பிரச்சினைகளில் ஒன்றாகும். அங்கு வாழும் சுமார் எட்டு கோடி தமிழர், எமது உடன் பிறப்புகள். அந்த எட்டுக்கோடி என்பது எமது பாதுகாப்பு கவசம். கடந்த காலங்களில் அந்த பாதுகாப்பு கவசம் சரியாக பயன்படாமல் போய் விட்டது. இதற்கான காரணங்கள் பல. அவற்றை ஆராய்வது இப்போது உசிதமானதல்ல. ஆகவே, கடந்த காலங்களை மறந்து விட்டு, தமிழகத்தின் ஆளும் கட்சியையும், தமிழக முதல்வரையும் வாழ்த்தி வரவேற்போம்."

# ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்கு ஊடகவியலை வலுப்படுத்துவோம்

## உலக பத்திரிகை சுதந்திர தின நிகழ்வு இன்று

கொழும்பு, மே 03

யுனெஸ்கோவின் 'விண்ட்ஹோக்' பிரகடனத்தின் 30 ஆண்டுகளை நினைவுகூரும் முகமாக இலங்கை பத்திரிகை ஸ்தாபனமானது உலக ஊடக சுதந்திர தினத்தை இன்று "தகவல் பொதுமக்களின் உரிமை" எனும் தொனிப் பொருளில் கொண்டாடுகிறது.

இவ்வருடத்திற்கான கருப்பொருளானது, தகவல்களை மேம்படுத்தும் ஊடகத்தின் முக்கியத்துவம் மற்றும் ஊடகவியலை பாதுகாக்கவும் அதற்கான கேள்வியை ஏற்படுத்துவதற்குமான கல்வியறிவு தகவல் பொதுமக்களின் உரிமையாவதில் முக்கிய பகுதியாக இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

ஊடகத்துறையில் நிபுணத்துவத்தை முன்னேற்றுவதற்கும் ஊடக சுதந்திரத்தை மேம்படுத்துவதற்குமான தேடலில் "ஜனநாயகத்தை முன்னேற்றுவதற்கு ஊடகவியலை வலுப்படுத்துவோம். தகவல் பொதுமக்களின் உரிமை" எனும் கருப்பொருளின் கீழ் சிறந்த ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான திறவுகோலாக இருக்கும் கூட்டு அபிலாஷைகளின் நம்பகமான தகவல்களை இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் அங்கீகரிக்கின்றது.

இச்செய்தியை பிரதிபலிக்கும் முகமாக "தகவல் பொதுமக்களின் உரிமை" எனும் நிலையை அணுகுவதற்கான முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தி உலக ஊடக சுதந்திர தினத்துடன் ஒருங்கே தகவலரியும் உரிமை தொடர்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பாத்ஃபைண்டர் அறக்கட்டளை ஒன்றிணைந்து இணையவழி செயலமர்வொன்றை வழங்கவிருக்கின்றது.

'நிகழ்காலத்தின் பெறுபேறுகள், எதிர்காலத்திற்கான முன்னுரிமைகள்', 'தகவல் அறியும் உரிமையை நடைமுறைப்படுத்தல்: அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் ஊழலை அம்பலப்படுத்துதல்' மற்றும் 'தகவல் அறியும் உரிமை் தனியுரிமை மற்றும் தரவு பாதுகாப்பு' ஆகிய தலைப்புகளில் பேச்சாளர்கள் கலந்துரையாடவிருக்கின்றனர். இக்குழு செயலமர்வானது ஊடகவியலாளர் வருண கருணாதிலகவினால் நெறியாளப்படும்.

இவ்விணையவழி செயலமர்வானது இன்று மாலை 3.30 மணிக்கு zoom தளத்தினூடாக நடைபெறும். மேலதிக விபரங்களை www.slpi.lk எனும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் வலைத்தளத்தினூடாக (Events பகுதியின் கீழ்) அல்லது பேஸ்புக் / ருவிட்டரில் பக்கங்களில் காணலாம்.

கல்வி TV CHANNEL-1

காலை
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

பகல்
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
03.05.2021 திங்கட்கிழமை
சார்வரி, சித்திரை 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# தமிழ் நாட்டு தேர்தல் முடிவுகள்

தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் எதிர்பார்த்தது போன்றே, திராவிட முன்னேற்ற கழக கூட்டணி அறுதி பெரும்பான்மையில் வெற்றிபெற்றிருக்கின்றது. ஜெயலலிதாவின் மறைவுக்கு பின்னர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.மு.க) செல்வாக்கு மக்கள் மத்தியில் சரிவடையத்தொடங்கியது. உள் முரண்பாடுகளி னால் கட்சி ரீதியிலும் அ.தி.மு.க பலவீனமடைந்தது. இவ்வாறானதொரு சூழலிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி இலகுவாகியிருக்கின்றது. ஒருவேளை ஜெயலலிதா இருந்திருந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இவ்வாறானதொரு இலகுவான வெற்றி கிட்டியிருக்காது.

தமிழ் நாட்டை பொறுத்தவரையில், பாரம்பரிய திராவிட கட்சிகளான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் மாறிமாறி ஆட்சியை கைப்பற்றுவதே, தமிழ் நாட்டின் அரசியல் வரலாறாக இருந்துவருகின்றது. இந்தக் கட்சிகளின் குறைபாடுகளை முன்வைத்து அரசியல் செய்யும் பல கட்சிகள் இருந்தபோதிலும்கூட, அவற்றால் ஒரு பிரதான சக்தியாக எழுச்சிகொள்ள முடியவில்லை.

இம்முறை சட்ட மன்றத் தேர்தலை பொறுத்தவரையில், ஒப்பீட்டடிப்படையில் சற்று வேறுபட்டதொரு தேர்தலாகவே அமைந்திருந்தது. அதாவது, கடந்த கால தேர்தல்களை பொறுத்தவரையில், இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையிலான போட்டிகளுமே, இரண்டு எதிர்நிலை கதாநாயகர்களுக்கிடையிலான போட்டியாகவே காணப்படுவதுண்டு. உதாரணமாக, எம். ஜி. ஆர். எதிர் கருணாநிதி, ஜெயலலிதா எதிர் கருணாநிதி. ஆனால், இம்முறை தேர்தலில் இருதரப்பிலும் கதாநாயகர்களென்று கூறுமளவிற்கு எவருமில்லை. போட்டியில் முன்னரங்கில் நின்ற எவருமே அவ்வாறான கதாநாயக அந்தஸ்தை பெற்றவர்களல்லர். இந்த பின்புலத்தில் இம்முறை தேர்தல், கட்சிகளுக்கிடையிலான போட்டியாகவே இருந்தது.

இதில் கவனிக்க வேண்டிய விடயம், ஈழ ஆதரவை தங்களது தேர்தல் பிரசாரங்களில் முதன்மையான விவகாரமாக முன்னிறுத்தியவர்கள் வழமைபோல் தோல்வியடைந்திருக்கின்றனர். குறிப்பாக, விடுதலைப் புலிகள் ஆதரவையும், ஈழ ஆதரவையும் தீவிரமாக மேடைகளில் ஒலிக்கும் நாம் தமிழர் கட்சி ஓர் ஆசனத்தைக்கூட வெற்றிகொள்ளவில்லை. அதேபோன்று, விடுதலைப் புலிகளின் கொடிகளுடன் தமிழ் நாட்டு மக்களிடம் சென்றவர்கள் அனைவருமே தோல்வியடைந்திருக்கின்றனர். ஒருவேளை, சீமான் திராவிட முன்னேற்ற கழகம் அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணியமைத்திருந்தால் வெற்றிபெற்றிருக்க வாய்ப்புண்டு. ஆனால் சீமான், தொடர்ந்தும் ஈழத் தமிழரின் பெயரில் அனைத்து தரப்பையும் எதிர்க்கும் ஒருவராகவே இருந்துவருகின்றார்.

அதேவேளை ஆளும் பி.ஜே.பி, தமிழ் நாட்டில் காலூன்றுவதற்கான பகீரத முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அதற்கென புதிய வியூகங்களை வகுத்திருந்தது. எனினும், அனைத்துமே தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன. பி.ஜே.பி, மத்தியில் மிகவும் பலமான நிலையிலிருந்தபோதிலும், அகில இந்திய அளவில் ஏனைய மாநிலங்கள் அனைத்திலுமே பெரியளவில் செல்வாக்கை கொண்டிருந்தபோதிலும்கூட, தமிழ் நாட்டில் மட்டும் மிகக் குறைந்தளவான ஆதரவைக்கூட தக்கவைக்க முடியவில்லை. பி.ஜே.பியின் தமிழ் நாட்டின் முன்னணி தலைவர்கள் பலரும் தேர்தலில் தோல்வியடைந்திருக்கின்றனர். இந்திய அளவில் பெரும் செல்வாக்கை கொண்டிருக்கும் பி.ஜே.பியின் நிழல் தலைமையான ஆர்.எஸ்.எஸ்ஸினால் தமிழ் நாட்டிற்குள் வலுவாக காலூன்ற முடியவில்லை. இந்த பின்புலத்தில், தமிழ் நாடு எப்போதுமே பி.ஜே.பிக்கு சவாலானதொரு மாநிலமாக இருக்கின்றது. இந்தத் தேர்தலிலும் அது மீளவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ் நாட்டு தேர்தலில் எந்த கட்சி வெற்றிபெற்றாலும், இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகார அணுகுமுறையில், குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய மாற்றங்கள் எவையும் ஏற்படப்போவதில்லை. அனைத்தும் வழமைபோன்றே இருக்கும்.

# தமிழர்களின் அற்ப சொற்ப தீர்வும் நீர்த்துபோகும் நிலை

- அலசுவது **இராஜதந்திரி** -



*அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இரு தினங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்கு புதிய அரசியலமைப்பின் உருவாக்கம் பற்றி குறிப்பிட்டிருந்தார். அச்சமயம் 13ஆவது திருத்தச்சட்டம்பற்றி குறிப்பிட்டதுடன் இத் திருத்தச்சட்டத்தை நீக்கக்கோரியும் மற்றும் அதனை திருத்தி அமைக்கும்படியும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார்.*

*இருந்தபோதிலும், 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து இந்தியாவுடன் கலந்தாலோசிக்க முடியும் எனவும் அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.*

*இலங்கை அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் 1987ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டு தற்சமயம் 34 வருடங்கள் இந்த ஆண்டுடன் பூர்த்தியாகின்றன.*

**புலிகள் புரிந்த வரலாற்று தவறு**

*இந்த 34 வருடங்களிலும், ஆரம்பத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரிக்கும் அனைத்து நடவடிக்கைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வடக்கு-கிழக்கு தமிழர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்ட நிலையில் அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டத்துடன் கூடிய இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை ஆட்சிமுறையை வெற்றிகரமாக அமுலாக்க முன்வந்த இந்திய அமைதிப் படையினரையும் விரட்டியடித்து, பின்னர் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியையும் கொலைசெய்து பெரும் வரலாற்றுத் தவறொன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் புரிந்திருந்தனர்.*

*தமிழீழ விடுதலைப்புலிகளின் இத்தூர நோக்கற்ற மற்றும் விரிவான அரசியல் சிந்தனையற்ற போக்கே இன்றுவரை வடக்கு-கிழக்கு தமிழர்களை ஒரு கௌரவமான அரசியல் தீர்வுக்காக கையேந்தவேண்டிய நிலையை ஏற்படுத்தி விட்டுள்ளது.*

*தற்போது வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு ஓரளவு நம்பிக்கையைத் தரக்கூடியதாக இருந்த 13ஆவது திருத்தச்சட்டமும் நீர்த்துப்போகும் நிலையே காணப்படுவதை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்து வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.*

*இருந்தபோதிலும், 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து இந்தியா எத்தகைய நிலைப்பாட்டை கொண்டிருக்கும் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.*

**இலங்கையின் கேந்திர முக்கியத்துவம்**

*இந்தியாவின் பிராந்திய அரசியலைப் பொறுத்தவரை அண்மைக்காலங்களில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கின்றது. ஏனெனில், 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய - ஒப்பந்தம் கைச்சாத்தானபோது காணப்பட்ட இலங்கைக்கும் இன்றைய இலங்கைக்குமிடையே நிறையவே வேறுபாடுகள் காணப்படுகின்றன.*

*1987ஆம் ஆணடு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியா ஒரு “தனிகாட்டு ராஜா”வாக காணப்பட்டிருந்தது.*

*அப்போது, சீனா அரசியல் மறுமலர்ச்சியோடு விழிப்படைந்திருக்கவில்லை. இதன் பின்னர் தொண்ணூறுகளில் சீன அதிபர் டென்சியாவோ பெங் கொண்டுவந்திருந்த புதிய அரசியல், பொருளாதார மறுமலர்ச்சி திட்டங்களே சீனாவை பிராந்திய ரீதியாகவும் பலமடைய வைத்துள்ளதுடன், 2009ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் ஒரு புதிய நிலப்பரப்பையே தலைநகர் கொழும்பின் கரையோரத்தில் உருவாக்கும் விதத்தில் சீனாவின் கரங்களை இலங்கையில் ஓங்க வைத்துள்ளது.*

*தென்னாசியாவில் இந்தியாவுக்கு எவ்வளவு தூரம் இலங்கை முக்கியமானதோ, அதேயளவு சீனாவுக்கும் இலங்கை முக்கியமானதாக இருக்கின்றது.*

**பிராந்திய வல்லரசுப்போட்டி**

*ஒரு பிராந்திய வல்லரசுப் போட்டியே இலங்கையை மையமாக வைத்து இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே நடந்துகொண்டிருக்கும் நிலையில், சீனாவின் செல்வாக்கு இலங்கைமீது பொருளாதார ரீதியாக காணப்படுகின்றது.*


*ஆனால், இலங்கைமீது இந்தியா அரசியல் ரீதியாக தனது செல்வாக்கைச் செலுத்துவதற்கு வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்னை ஒரு பிடியாக இருக்கின்றது.*

*2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததிலிருந்து இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் தரப்பு இந்தியாவிடம் 13ஆவது திருத்தச்சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தை வலியுறுத்தி வந்திருந்தது.*

*ஆனால், இதுவிடயத்தில் இந்தியா போதுமானளவு அக்கறை கொள்ளாமல் இருந்தமை, மறைமுகமாக இந்தியா 13ஆவது திருத்தச்சட்டத்தை இலங்கையில் தனது பிடியைக்கொண்டிருப்பதற்கு ஒரு காரணியாக வைத்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

*இந்நிலையில், புதிய அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் இலங்கைக்கும் , இந்தியாவுக்குமிடையே இராஜதந்திர ரீதியான சர்ச்சைகள் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே குறிப்பிடலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் நன்மைகள் கூடுதலாகும். நேர்மறை எண்ணங்கள் அதிகரித்து நிம்மதி அடைவீர்கள். எதையும் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை உண்டாகும்.

**இடபம்**
முழு முயற்சியுடன் செயல்பட்டுப் பணியை முடிப்பீர்கள். அலுவலக இரகசியங்களை யாரையும் நம்பி வெளியிட வேண்டாம். உற்சாகம் ஏற்படுவதற்காகத் தவறு ஏதும் செய்ய வேண்டாம்.

**மிதுனம்**
பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். பரபரப்பான நாள். வேலைச்சுமையால் சோர்வு இருக்கும். ஆதாயம் உண்டு. நேற்று வரை இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் அடைவீர்கள்.

**கடகம்**
வீட்டை சீர்செய்யும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். சாதனை ஒன்றைச் செய்வதன்மூலம் சமூகத்தில் மரியாதை கூடும். சகோதர, சகோதரி மூலம் சிறு நன்மை ஒன்று உண்டு.

**சிம்மம்**
அடிப்படை வசதிகளை மேம்படுத்திக்கொள்வதன் மூலம் மகிழ்வீர்கள். பெரியோருக்கு நன்மை செய்வீர்கள். அனுபவசாலிகள் உதவுவர். உழைப்பால் ஏற்றம் பெறுவீர்கள். சில சோதனைகள் நேரலாம்.

**கன்னி**
குடும்பத்தில் முக்கிய பொறுப்புகளை ஏற்க வேண்டி வரும். எதிர்பார்க்காத விஷயம் ஒன்று நடந்து வியப்பளிக்கும். மகிழ்ச்சி கூடும். நிறுத்தி வைத்திருந்த முக்கிய விஷயம் ஒன்று நிறைவேறும்.

**துலாம்**
உறவினர்கள் மூலம் நன்மை ஏற்படும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் உங்களுக்கு சாதமாக செயல்படுவர். நட்பு வட்டம் விரியும். அந்நிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் கிடைக்கும்.

**விருட்சிகம்**
சுபநிகழ்ச்சி கைகூடும். தம்பதி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். தேவையில்லாத விஷயங்களை நினைத்து குழம்ப வேண்டாம். உங்களுடைய எல்லா விஷயத்திலும் நண்பர்கள் துணை நிற்பார்கள்.

**தனுசு**
பணம் செலவாகும். அநாவசிய விஷயங்களைப் பேச வேண்டாம். புது வீட்டிற்கு மாறத் திட்டமிடுவீர்கள். நண்பர்களால் ஏமாற்றம் வரும். யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். கைமாற்று தராதீர்கள்

**மகரம்**
உறவினர், நண்பர்களின் அன்பு திருப்திகரமாக இருக்கும். வாகன வசதி வாய்ப்புகள் பெருகும். மனபாரம் குறையும். வீட்டில் ஆடம்பரப் பொருட்களின் சேர்க்கை உண்டாகும்.

**கும்பம்**
பொருளாதார பிரச்னைகள் தீரும். குழந்தைகள் நன்மை அடைவர். எதிர்பார்த்த கவுரவம் கிடைக்கும். கடன் குறைய ஆரம்பிக்கும். தொழில், வியாபாரம் மேன்மை அடையப் பாடுபடுவீர்கள்.

**மீனம்**
சந்தோஷம் தரும்படியான செலவினங்கள் இன்று அதிகரிக்கும். தாயாருக்கு நன்மை விளையும். வாகனம் வாங்குவீர்கள். நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். நிதானமான நன்மைகள் வரும்.

# தமிழகத்தில் கொரோனா புதிய உச்சம்: ஒரே நாளில் 19,588 பேருக்கு பாதிப்பு!



*சென்னை, மே 03*

தமிழகத்தில் கொரோனா தொற்றுபாதிப்பு தீவிரமடைந்து வரும் நிலையில், நேற்று முன்தினம் புதிய உச்சமாக 19,588 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா தொற்றின் 2ஆவது அலை தீவிர பாதிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், தினசரி பாதிப்பு எண்ணிக்கை 4 இலட்சத்தை நெருங்கி வருகிறது. இந்த வைரஸ் பாதிப்பை கட்டுப்படுத்தும் நோக்கில் மத்திய மாநில அரசுகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில், தடுப்பூசி செலுத்தும் பணியும் தொடர்ந்து வருகிறது. ஆனாலும் தொற்று பாதிப்பு நாள்தோறும் அதிகரித்து வருவதால், இந்தியாவின் பல பகுதிகளில் அசாதாரண சூழல் நிலவி வருகிறது.

அந்த வகையில் கொரோனா தொற்று பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்களில் ஒன்றான தமிழகத்தில் கொரோனா தொற்று நாளுக்கு நாள் உச்சம் தொட்டு வருகிறது. இதனால் தமிழகம் முழுவதும் பல்வேறு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இரவு நேர ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் தினசரி பாதிப்பு எண்ணிக்கை ஏற்றம் கண்டு வரும் நிலையில், இன்று புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

இதில் நேற்று முன்தினம் ஒரே நாளில் தமிழகத்தில் கொரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை 19588 ஆக உயர்ந்துள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 11 இலட்சத்தை கடந்து 11,86,344 ஆக பதிவாகியுள்ளது. மேலும் நேற்று ஒரே நாளில் 17,164 பேர் குணமடைந்துள்ள நிலையில், குணமடைந்தவர்கள் மொத்த எண்ணிக்கை 10,54,746 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா தொற்று பாதிப்புக்கு நேற்று முன்தினம்ஒரே நாளில் 147பேர் பலியாகியுள்ள நிலையில், மொத்த பலி எண்ணிக்கை 14,193 பேராக உயர்ந்துள்ளது. இன்று அதிகபட்சமாக சென்னையில், 5829 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், செங்கல்பட்டு மாவட்டத் தில் 1445 பேரும், கோவையில் 1257 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



# எச்சரிக்கையையும் மீறி அறிவாலயத்தில் குவிந்த தொண்டர்கள் குதூகலம்

*சென்னை, மே 03*

தேர்தல் வெற்றி கொண்டாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அண்ணா அறிவாலயத்துக்கு வெளியே தி.மு.க. தொண்டர்கள்பட்டாசு வெடித்து கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ள காட்சிகள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருவதற்கு மத்தியில், வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருவதால், பல்வேறு கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, கொரோனா பரவலை கட்டுப்படுத்த தேர்தல் வெற்றி கொண்டாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தேர்தல் முடிவுகளை அமைதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். பட்டாசு வெடிக்கக் கூடாது, ஊர்வலமாக செல்லக் கூடாது, இனிப்பு வழங்கக் கூடாது என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

தொண்டர்களை தலைவர்கள் கட்டுக்குகள் வைத்திருக்க வேண்டும். தேர்தல் ஆணையம் பிறப்பித்துள்ள கட்டுப்பாடுகளை அரசியல் கட்சிகள் பின்பற்றி முன்மாதிரியாக இருக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

குறிப்பாக தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில், "வீதிகள் வெறிச்சோடட்டும், வீட்டிற்குள் இருந்தே வாக்கு எண்ணிக்கையை கவனியுங்கள்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்றுககாலை முதல் தமிழகத்தில் பெரும்பாலான தொகுதிகளில் திமுக தொடர்ந்து முன்னிலை வகித்து வரும் செய்திகள் வெளியாவதை பார்த்த திமுக தொண்டர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பத்து வருடங்களுக்கு பிறகு, மீண்டும் தி.மு.க. ஆட்சி அமையவுள்ள நிலையில் சென்னையிலுள்ள அண்ணா அறிவாலயத்துக்கு வெளியே குவிந்த திமுக தொண்டர்கள், திமுக வெற்றி பெற போகிறது என்று பட்டாசுகளை வெடித்தும், மக்களுக்கு இனிப்புகளை வழங்கியும் "ஸ்டாலின்தான் வாராரு, விடியல் தர போறாரு" என்ற பாடலுடன் தொண்டர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்தான வீடியோ காட்சிகள் வெளியாகியுள்ளன.

# தமிழகத்தில் முழு ஊரடங்கு? புதிய அரசு முடிவெடுக்கும்!

*சென்னை, மே 03,*

கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தி யில், தமிழகத்தில் புது ஆட்சியை அமைப் பது யார் என்பது நேற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ள நிலையில், தமிழகத்தில் முழு ஊரடங்கு விதிக்கப்படுமா என்ற கேள்வி யும் எழுந்துள்ளது.

தமிழகத்தில் தினசரி கொரோனா பாதிப்பு 18 ஆயிரத்தைத் தாண்டி விட்டால், அதன்பிறகு பரவல் மேலும் அதிகரிக்க ஆரம்பித்துவிடும். அதற்கு நாம் இடம் கொடுத்துவிடக் கூடாது. அதனால், அந்த சூழ்நிலையைச் சமாளிக்க கண்டிப்பாக ஞாயிற்றுக்கிழமை மட்டுமில்லாமல், தொடர் முழு ஊரடங்கை அமல்படுத்த வேண்டும் என முதல்வரிடம் தனிப்பட்ட முறையில் தலைமை செயலாளர் கூறியிருக் கின்றார்

இந்த நிலையில், நேற்று முன்தினம் ஒரு நாளில் தொற்று பாதிப்பு 18 ஆயிரத்தைத் தாண்டி 19,588 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 147 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரத்துறை அதிகாரபூர்வமாகத் தெரிவித்திருந்தது. இதற்கிடையில் மருத்துவர்கள் வட்டாரத்தில் கூறப்படும் தகவல் அதிர்ச்சி யளிக்கிறது.

"ஏற்கனவே, தமிழகத்தில் அதிகாரபூர்வ மாக அறிவிக்கப்படும் பாதிப்பு புள்ளி விவரத்தைவிட அதிகமாகத்தான் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்து மருத்துவர்கள் வட்டாரத்தில் நிலவி வருகிறது. அதிகாரபூர்வமாக வழங்கப்பட்ட புள்ளி விவரத்திலே பாதிப்பு 19 ஆயிரத்தைத் தாண்டி விட்டது என்றால், அதிகாரபூர்வ மற்ற நிலையில் தொற்று எண்ணிக்கை மிக அதிகமாகவே இருக்கும். அதனால், அன்றைக்கு தலைமை செயலாளர் சொன்னபடி தொடர் முழு ஊரடங்கு தமிழகத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய கட்டாயம் தற்போது எழுந்துள்ளது" என்கிறார்கள் அவர்கள்.

இதுவரை காபந்து அரசில், அதிகாரிகள் முடிவு எடுத்து வந்தனர். இனிமேல் புதிய அரசுதான்முடிவெடுக்கும்என்பதால், ஊரடங்கு குறித்த அறிவிப்பும் ஒரு சில தினங்களில் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதிகளைமீறி கிரிக்கெட் பயிற்சி 23 பேருக்கு சுயதனிமைப்படுத்தல்!

வடமராட்சி, மே 03

சுகாதார துறையினரின் அறிவுறுத்தலை மீறி கிரிக்கெட் பயிற்சியில் பங்கேற்ற 23 பேர் நெல்லியடி பொலிஸாரால் கடும் எச்சரிக்கையின் பின்னர் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

துன்னாலை மேற்கில் உள்ள விளையாட்டுக் கழகத்தில் கடந்த சில தினங்களாக கிரிக்கெட் பயிற்சி இடம்பெற்று வந்தது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலின் அடிப்படையில் பயிற்சியில் ஈடுபட வேண்டாம் என்று அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் உரியவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆனால், அதனையும் மீறி நேற்று காலையும் பயிற்சி இடம்பெற்றது.

இதுதொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரினால் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. மைதானத்துக்குச் சென்ற பொலிஸார், பயிற்றுவிப்பாளரைக் கைது செய்து நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

பயிற்றுவிப்பாளர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அவரையும், அவரின் கீழ் பயிற்சி பெற்ற 22 பேரையும்பொலிஸார் கட்டாய சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர். (ஐ-03)

# நீண்டகால காணி பிணக்குக்கு காணி மத்தியஸ்தர் பிரிவால் தீர்வு!

மானிப்பாய், மே 03

நிலஅளவை செய்ய முடியாது எல்லைகள் அற்று இருந்தமையால் நீண்டகாலம் பிணக்கில் இருந்த காணிகளுக்கு யாழ். மாவட்ட விசேட காணி மத்தியஸ்த பிரிவினர் தீர்வு பெற்றுக் கொடுத்துள்ளனர்.

எழுதுமட்டுவாள் - கரம்பகம் ஜே-330 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட மூவரின் காணிப் பிணக்குகளுக்கே தீர்வு காணப்பட்டுள்ளது.

மூன்று பேர் கொண்ட யாழ். மாவட்ட விசேட காணி மத்தியஸ்த பிரிவினர் நேரடியாக கரம்பகம் பகுதிக்கு சென்று உறுதிகளின் அடிப்படையில் காணிகளை அளவை செய்து காணிப் பிணக்கை தீர்த்து வைத்தனர். இவ்வாறு முடிவுக்கு வந்த பிரச்னையை தீர்க்கும் பொருட்டு இரு வாரங்களில் பிணக்கு தீர்க்கப்பட்டதற்கான சான்றிதழ் வழங்கி சுமூகமாக தீர்க்கப்படும் என தவிசாளர் தேவதயாளன் தெரிவித்தார். (ஐ - 5)

# வரணியில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

தென்மராட்சி - வரணி சந்தைப் பகுதியில் இரண்டு குழுக்கள் வாள்வெட்டு வன்முறைச் சம்பவத்தில் ஈடுபட்டதில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் நேற்று மாலை வரணி சந்தைப் பகுதியில் இடம்பெற்றது. இந்த வன்முறைச் சம்பவத்தால் மக்கள் மிகுந்த அச்சமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் வாள்வெட்டில் சிக்கிய ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று காயமடைந்தவரை மீட்டு சாவகச்சேரி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (ஐ)

# இராணுவ சோதனை சாவடிகள் எங்களுக்கு வசதியாக உள்ளன!

## அமைச்சர் டகள்ஸ் தேவானந்தா




**வவுனியா, மே03**

**“இராணுவ சோதனை சாவடிகள் எங்களிற்கு வசதியாக இருப்பதுடன் நாங்கள் அதனை வசதியாக மாற்றிக்கொள்ள வேண்டுமே தவிர, அதனை கெடுபிடி என்று நோக்கக்கூடாது”,என்று கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

நேற்று வவுனியா வந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். அதிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கொரோனா என்பது இலங்கையில் மாத்திரமல்ல எல்லா நாடுகளிலுமே தற்போது பாரிய அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றது. சில நாடுகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதில் இந்தியாவையும் குறிப்பிடலாம். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதும் சில கவனக்குறைவு காரணமாக மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இருந்த போதும் இதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகின்றது. அதே போன்று விமான நிலையம் ஊடாக வெளிநாடுகளில் இருந்து வருகை தருபவர்களை கூட கட்டுப்படுத்தி இருக்கின்றது.

வெளிநாடுகளில் இருந்து பரவுவதற்கான வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட அவ்வாறு நடைபெறாமல் குறைக்கப்பட்டுள்ளது. முழுமையாக கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதில் எவ்வித பிரயோசனம் இல்லை.

எமது நாடுமட்டுமல்லாது அனைத்து நாடுகளுமே தங்களது நாட்டை முடக்கம் நிலைக்கு உட்படுத்தாமல் பாதிக்கப்பட்ட பகுதிகளே மாத்திரமே அந்த அரசாங்கங்கள் முடக்கி வருகின்றன. அவ்வாறு நாட்டை முடக்கும் சந்தர்ப்பத்தில் நாடு பட்டினியில் மரணிக்க வேண்டி வரும். அதற்காகதான் எமது அரசாங்கம் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளை சுகாதார முறைகளில் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக வீதியிலே இருக்கின்ற இராணுவ சோதனை சாவடிகளில் இராணுவத்தினர் முகக்கவசம் அணியாதவர்களை மறித்து அணிந்து செல்லுமாறு அறுவுறுத்தி வருகின்றனர். மேலும் இராணுவச்சோதனை சாவடிகள் எங்களிற்கு வசதியாக இருப்பதுடன் நாங்கள் அதனை வசதியாக மாற்றிக்கொள்ள வேண்டுமே தவிர, அதனை கெடுபிடி என்று நோக்கக்கூடாது.

இராணுவத்தினர் முகக்கவசம் அணிந்து செல்லுமாறு அறிவுறுத்தி வருகின்றனர். அதனை சொல்லுவதற்கும் ஒருவர் தேவைதானே அதனைதான் அவர்கள் செய்து வருகின்றனர். ஆகவே, சோதனை சாவடி இருப்பதால் முகக்கவசம் அணிய வேண்டும் என அனைவரும் கவனமாக இருப்பார்கள். அத்தோடு சோதனை சாவடி நிரந்தரமாக்க வேண்டிய தேவை இல்லை. (ஐ)

# போலி காசோலைகளை பயன்படுத்தி ரூ.430 இலட்சம் மோசடி; 4 பேர் கைது

கொழும்பு, மே 03

காசோலை மோசடி தொடர்பில் 4 சந்தேகநபர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் போலியான காசோலைகளைப் பயன்படுத்தி தனியார் வங்கியொன்றிலிருந்து 43 மில்லியன் ரூபாய் பணத்தை பெற்றுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனியார் இரும்பு கம்பி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றின் பெயரில் சந்தேகநபர்கள் இந்தப் போலிக் காசோலையை தயாரித்து பணம் பெற்றுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் 4 சந்தேகநபர்களை கைது செய்வதற்காக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் இந்தத் தொழிற்சாலையின் வங்கிக் கணக்கு உள்ள வங்கியின் அதிகாரி ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நிறைவேற்று அதிகாரி ஒருவர் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நாட்டுக்கு வந்த நபரொருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# இலங்கை தமிழரின் இன விடுதலைக்கு பேராதரவு கிடைக்கும் என நம்புகிறோம்

## தி.மு.க.கூட்டணி வெற்றிக்கு மாவை வாழ்த்து

யாழ்ப்பாணம், மே 03

தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதனால் இலங்கைத் தமிழரின் இன விடுதலைக்கும் பேராதரவு கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளோம்”, இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

தமிழக தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. இதில், 140 இற்கும் மேற்பட்ட தொகுதிகளை திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான கூட்டணி பெற்று ஆட்சி அமைக்கத் தயாராகவுள்ளது.

இந்நிலையில் தி.மு.க. பெற்ற வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து மாவை சேனாதிராசா அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில், “இந்திய நாட்டின் தமிழகத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் மாபெரும் வெற்றிக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

“நடைபெற்ற தமிழ்நாட்டின் சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக் கட்சிகள் பெரு வெற்றி பெற்றமை இலங்கைத் தமிழர்களுக்குப் பெரு மகிழ்ச்சியேதான். தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழகத்தின் ஆட்சி அமைவதனால் இலங்கைத் தமிழரின் இன விடுதலைக்கும் பேராதரவு கிடைக்குமென நம்பிக்கை கொண்டுள்ளோம்.

“இலங்கைத் தமிழினமும், தமிழர் தேசமும் விடுதலை பெறுவதற்கும் அனைத்துக் கட்சிகளுடனும் மத்திய அரசுடனும் இணக்கம் கொண்டு செயற்படுவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என நம்புகிறோம்.

திராவிட இயக்கத் தலைவர் தமிழ் நாட்டு மக்கள் தலைவர் கலைஞர் கருணாநிதியின் கொள்கை வழி நின்று எதிர் காலத்திலும் தலைவர், தளபதி முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தின் வெற்றிக்கும் உழைத்திட இலங்கைத் தமிழர் தரப்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும், வெற்றி பெறவைத்த மக்களுக்கும் எம் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.”, என்றுள்ளது. (ஐ)

# வடமராட்சியில் கைக்குண்டு மீட்பு

வடமராட்சி, மே 03

வடமராட்சி, பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கற்கோவளம் கடற்கரை பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் நேற்றுக் காலை இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டது.

இது குறித்து பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் அதை மீட்டனர். அத்துடன், இது தொடர்பில் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோத ஊடுருவல்களை அடுத்து

# வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

**கொழும்பு, மே03**

**இந்தியாவில் மோசமடைந்துவரும் கோவிட்-19 நோய்த் தொற்று நிலைமை காரணமாக வடக்கு கடற்பரப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.**

தற்போதைய கோவிட்-19 நோய்த்தொற்று பரவல் காரணமாக இந்திய நாட்டினர் நாட்டைவிட்டு வெளியேறி அண்டை நாடுகளுக்கு அடைக்கலம் புகுந்து வருகின்றனர். இதனால், வடக்கு கடற்பரப்பில் இந்திய எல்லையை பாதுகாக்க முடிவு செய்யப்பட்டது என்று கடற்படைப் பேச்சாளர், கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

இதன்படி வடக்கு கடற்பரப்பிலும், கடற்கரைகளிலும் சுற்றுக்காவல் பணிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இருப்பினும் பல இந்தியர்கள் படகுகள் மூலம் நாட்டிற்குள் நுழைந்தனர் என்று சமீபத்திய நாள்களில் தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்தார். (ஐ)



## ரிஷாத் எம்.பி., அவரின் சகோதரரை விடுதலை செய்யுமாறு ஆர்ப்பாட்டம்!

வவுனியா, மே 03

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரிஜாஜ் பதியுதீன் ஆகியோரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வவுனியாவில் நேற்று காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

புதியசாளம்பைக்குளம் பள்ளிவாசலுக்கு முன்பாகவே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டகாரர்கள்-

"ரிஷாத் பதியுதீனை அதிகாலையில் கைது செய்யப்பட்டதையிட்டு வேதனையடைகின்றோம். அவரின் கைதுக்கு வன்மையான கண்டனங்களை தெரிவிக்கின்றோம். அரசாங்கம் தன்னுடைய தோல்வியை மறைப்பதற்காக இவ்வாறான கைதுகளை முன்னெடுத்து வருகின்றது. அவர் அமைச்சராகவிருந்து பல்வேறு அபிவிருத்திகளை வன்னி மாவட்டத்திலே முன்னெடுத்தவர். எனவே, அவர் விடுதலை செய்யப்படவேண்டும். நாட்டின் ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றனர்.

இதன்போது, ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "யாரைத் திருப்திப்படுத்த இந்த கைது", "சர்வதேச உறவுகளே அவரின் விடுதலைக்காக் குரல்கொடு", "சிறுபான்மை தலைமைகளை விடுதலை செய்" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன் அவற்றைக் கோஷங்களாகவும் எழுப்பினர். (ஐ)

## வவுனியா தெற்கு கல்வி பணிப்பாளராக திருமதி அன்னமலர்!

வவுனியா, மே 03

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி அன்னமலர் சுரேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் எதிர்வரும், 5ஆம் திகதி தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.

வவுனியா தெற்கு கல்வி வலயப்பணிப்பாளராக கடமையாற்றிய முத்து இராதாகிருஷ்ணன் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பணிப்பாளராக இடமாற்றப்பட்டுள்ளார். இதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே திருமதி அன்னமலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த நான்கு வருடங்களாக வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கடத்தப்படவிருந்த முதிரை குற்றிகள் புளியங்குளத்தில் கைப்பற்றப்பட்டன!

வவுனியா, மே 03

கருங்கற்களை மூடி மறைத்து வைக்கப்பட்ட முதிரை மரக்குற்றிகளை பொலிஸார் மீட்டுள்ளனர். இதன்போது 43 முதிரை மரக் குற்றிகளும், 2 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன என்ற பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா புளியங்குளம் பொலிஸ் பிரிவில் நைனாமடு பகுதியில் வைத்து நேற்றுக் காலை இந்த மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த பகுதியில் மரக்கடத்தல் இடம்பெறுவதாக புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று அப்பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதன்போது, கருங்கற்களால் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மரக்குற்றிகள் மீட்கப்பட்டன. இவற்றை கடத்திச் செல்ல முயன்றவர்கள் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடி விட்டனர் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து பொலிஸார் மரக்குற்றிகளையும், இரு வாகனங்களையும் கைப்பற்றினர். (ஐ)

## மன்னாரில் இரு தேவாலயங்கள் தனிமைப்படுத்தப்பட்டன!

மன்னார், மே 03

தனிமைப்படுத்தல் விதி முறைகளை மீறி, பக்தர்களை ஒன்று கூட்டி திருவிழா, திருப்பலி நடைபெற்ற இரு தேவாலயங் கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னாரின் நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள கற்கடந்த குளம் மற்றும் அச்சங்குளம் பகுதியில் உள்ள இரண்டு தேவாலயங்களுமே நேற்று முன்தினம் காலை திருவிழா, திருப்பலி நடைபெற்றமையால் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 14 நாட்களுக்கு மேற்படி இரு தேவாலயங்களும் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கும் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

## முள்ளியவளையில் குண்டுகள் மீட்பு!

முல்லைத்தீவு, மே 03

முள்ளியவளை - தண்ணிமுறிப்பில் வயல் ஒன்றிலிருந்து இரு கைக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியை சேர்ந்த லிங்கேஸ்வரன் என்பவரின் வயல் காணியில் கைக்குண்டு ஒன்று காணப்பட்டது. இது தொடர்பில் அவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் அந்தக் கைக்குண்டை மீட்டனர். இதன்போது இன்னொரு வயல் காணியிலும் கைக்குண்டு என்று மீட்கப்பட்டது.

போரால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளில், மக்கள் மீள்குடியேறியபோது வெடிபொருட்கள் அகற்றப்பட்டன. ஆனால், அண்மை நாட்களாக தண்ணிமுறிப்பு பகுதியில் வெடிபொருட்கள் அடிக்கடி மீட்கப்படுகின்றன என்று அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர். (ஐ)

## துணுக்காய், மாந்தை கிழக்கு மக்களுக்கு அவசர எச்சரிக்கை

முல்லைத்தீவு, மே 03

துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேசங்களில் சகல விழாக்கள், நிகழ்வுகள் மற்றும் ஒன்று கூடும் சந்தர்ப்பங்களை உடனடியாக நிறுத்துமாறு மாந்தை கிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

மல்லாவியில் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையை தொடர்ந்தே இந்த அவசர அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாந்தை கிழக்கு மருத்துவ அதிகாரி பணிமனை நேற்று விடுத்த செய்திக் குறிப்பில், "எமது நாட்டில் கொரோனா தற்சமயம் வேகமாக பரவுகின்றமை யாவரும் அறிந்த விடயம். தற்போது எமது பிரதேசத்திலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எனவே சகல விழாக்கள், நிகழ்வுகள் ஒன்று கூடல்கள், தனியார் வகுப்புகள் மற்றும் சமய ஆராதனைகளை உடனடியாக நிறுத்துவதுடன் சுகாதார நடைமுறைகளை சரியாக கடைப்பிடிக்குமாறும் தவறியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## சட்டவிரோத மீன்பிடி தொடர்பான கைது நடவடிக்கை தொடரவேண்டும்

முல்லைத்தீவு, மே 03

முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த 15 நாட்களுக்கு முன்னர் முல்லைத்தீவு கடலில் சுருக்கு வலை பயன்படுத்துதல், வெளிச்சம் பாய்ச்சி தொழில் செய்தல் உட்பட பல்வேறு சட்ட விரோத தொழில்கள் நடைபெற்றன.

"இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர், மாவட்டச் செயலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத் திடம் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வந்தோம். தற்போது கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களமும் கடற்படையும் இணைந்து கடந்த 15 நாட்களுக்கு மேலாக சட்டவிரோத தொழிலில் ஈடுபடுகின்றவர்களை கைத செய்து வருகின்றது. இவை தொடர வேண்டும்.

"கைதுகள் நிறுத்தப்பட்டால் சட்டவிரோத தொழில்கள் அதிகரித்து முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை சிதைத்து விடும்" என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற நடவடிக்கைகளும் இந்த வாரம் முடங்குகின்றன!

## முக்கிய வழக்குகளுக்கு மட்டும் அனுமதி

கொழும்பு, மே 03

**நாட்டிலுள்ள அனைத்து நீதிமன்றங்களின் நடவடிக்கைகளும் அடுத்த வாரம் இடைநிறுத்தப்படுகிறது. அவசரமான வழக்குகளும், பிணை வழக்குகளும் மட்டுமே விசாரணைக்கு எடுக்கப்படும் என்று நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலகம் நேற்று சகல நீதிவான்களிற்கும் சுற்றறிக்கை விடுத்துள்ளது.**

அந்த சுற்றறிக்கையின்படி, இன்று 3ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 7ஆம் திகதி வரை பிணை சம்பந்தமான வழக்குகளும், நீதிபதி அவசரம் என்று கருதும் வழக்குகள் தவிர்ந்த, ஒரு தரப்பு அல்லது சட்டத்தரணி அவசம் என்று கருதும் வழக்குகள் தவிர்ந்த எந்த வழக்கும் விசாரணைக்கும் எடுத்துக்கொள்ளப்படாது.

நீதிமன்ற பதிவாளர்கள், நீதிபதிகள் ஆகக்குறைந்த ஊழியர்களை பணிக்கு அமர்த்தில் செயற்பட வேண்டும். பிணை விண்ணப்பங்களை மெய்நிகர் வழிமுறையிலேயே விசாரிக்க வேண்டும்.

சட்டத்தரணிகள் தமது கட்சிக்காரர்களை நீதிமன்றத்திற்கு வருகை தருவதைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.

ஒத்திவைக்கப்படும் வழக்குகளின் அடுத்த வழக்கு தவணை திகதியை, வழக்கு விசாரணைக்கு முதல் நாள் அல்லது அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு முன்னர் காட்சிப்படுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொலிஸாரை தாக்க முயற்சி: சந்தேகநபர்மீது துபாக்கி சூடு

கண்டி, மே 03

சுற்றிவளைப்பின் போது பொலிஸாரை கோடரியால் தாக்க முற்பட்ட சந்தேகநபர்மீது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். இதில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கண்டி - தெல்தெனியா பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தவை வருமாறு:

தெல்தெனியாவின் திகன - ஹம்பகாவத்த பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சிலர் தங்கியிருக்கின்றனர் என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. இதன்போது அங்கிருந்த சந்தேக நபரொருவர் கோடரியால் பொலிஸாரை தாக்க முற்பட்டுள்ளார்.

இதனால், அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இதன்போது காயமடைந்தவரை கைது செய்த பொலிஸார் சிகிச்சைக்காக அவரை கண்டி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில் பொலிஸார் மேலும், நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர். இவர்கள், தெல்தெனியா மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் போதைப் பொருள் கடத்தல்கள், கால்நடை கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மஹிந்தானந்தா சுயதனிமையில்!

கொழும்பு, மே 03

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கட்டாய சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் சாரதி மற்றும் அவரின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்படுத்தப்பட்டது. இதையடுத்தே அமைச்சர் மஹிந்தானந்தா கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக நாடு திரும்பிய குடும்பத்துக்கு தனிமை!

புத்தளம், மே 03

இந்தியாவில் இருந்து மீன்பிடிப் படகு மூலம் சட்டவிரோதமாக நாடு திரும்பிய பெண் ஒருவரையும் அவரின் இரு பிள்ளைகளையும் சுகாதாரப் பிரிவினர் கண்டுபிடித்து தனிமைப்படுத்தியுள்ளனர். அத்துடன், அவர்களுடன்வந்த பெண்ஒருவரை பொலிஸாரின்உதவியுடன்தேடி வருகின்றனர்.

புத்தளம் - வென்னப்புவ பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த 34 வயதான தாயும், 13 மற்றும் 4 வயதான பிள்ளைகளுமே இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள், தமிழ்நாடு சென்னையின் குப்பம் பகுதியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடி படகு மூலம் தலைமன்னாருக்கு வந்திருந்தனர். பின்னர் அங்கிருந்து மன்னார் சென்றவர்கள் அன்றிரவே கொழும்பு செல்லும் பேருந்தில் புத்தளம் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் தகவல் தெரிய வந்ததை தொடர்ந்து பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவின் அதிகாரிகள் புத்தளம் வென்னப்புவ பிரதேசத்தில் அவர் பதுங்கியிருந்த வீட்டிற்கு சென்று அவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். (ஐ)

## தம்மிகவின் கொரோனா பாணி தொற்றைக் குணப்படுத்தாது!

### ஆய்வில் வெளியானது தகவல்

கொழும்பு, மே 03

கேகாலையை சேர்ந்த தம்மிக்க பெரேரா தயாரித்த கொரோனா பாணி கொரோனாவில் இருந்து எவ்வகையிலும் பாதுகாப்பளிக்கவில்லை என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் உத்தரவுப்படி இராஜரட்டை பல்கலைக்கழகத்தால் அநுராதபுரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த 68 கோவிட் 19 நோயாளிகளுக்கு தம்மிக்க தயாரித்த கொரோனா பாணி வழங்கி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

எனினும், இதனை எடுத்துக் கொண்ட எவரிடத்திலும் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை என இராஜரட்டை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச்சேர்ந்த டாக்டர் சேனக பிலபிட்டிய ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போது கூறினார்.

தம்மிக்கவின்இந்த கொரோனா பாணியை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன ஆகியோர் ஊடகங்கள் முன்னிலையில் அருந்திய நிலையில் இந்த பாணி குறித்த நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டது.

எனினும், இதனை அருந்திய பின்னரும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி கொரோனா தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டு மீண்டார். இந்நிலையில் ஆராய்ச்சிகளின் பின்னர் இந்தப் பாணி கொரோன தொற்று நோயில் இருந்து பாதுகாப்பளிப்பதில் பயனற்றது என சுகாதார அமைச்சு நிபுணர் குழு அறிவித்தது.

இதேவேளை, இலங்கைக்கு தடுப்பூசி கிடைத்த பின்னர் தான் கைவிடப்பட்டதாக கடந்த மாதம் தம்மிக்க பெரேரா கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கிடையில் அவரது பாணி மருந்து பயனற்றது என ஆய்வுகளின் பின்னர் அறிவிக்கப்பட்டமை குறித்து தம்மிக்க பெரேரா இதுவரை எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. (ஐ)

## கராபிட்டி போதனா வைத்தியசாலை தொற்றாளர் விடுதியும் நிரம்பியது!

காலி, மே 03

காலி - கராபிட்டிய போதனா வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவான 36ஆம் இலக்க விடுதியும் தொற்றாளர்களால் நிரம்பி வழிகின்றது. இதனால், கராபிட்ட வைத்தியசாலையின் மேலும் இரு விடுதிகள் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன என்று வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் கே.எச்.ஜி.ஜிவரதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 36ஆம் இலக்க விடுதியில் 55 தொற்றாளர்கள் காணப்பட்டனர். இதனைக் கருத்திற்கொண்டு தற்காலிகமாக 46, 25ஆம் இலக்க விடுதிகள் கொரோனா தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக அக்மிமன மெலிபன் வைத்தியசாலையும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்காக ஒதுக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஆட்பதிவு திணைக்களம் மூடப்பட்டது!

கொழும்பு, மே 03

கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக ஆட்பதிவு திணைக்களத்தின் அனைத்து பொது மக்கள் சேவைகளும் மறு அறிவித்தல் வரை இரத்து செய்யப்பட்டுள்ளன. இந்த அறிவித்தலை ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர்நாயகம்வியானி குணதிலக நேற்று விடுத்துள்ளார். (ஐ)

## நுவரெலியாவில் ஒரேநாளில் 56 தொற்றாளர்

நுவரெலியா, மே 03

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் மேலும் 56 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதன்படி கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை குறித்த மாவட்டத்தில் கொரோனாவால் ஆயிரத்து 481 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், கண்டி மாவட்டத்தில் 84 பேருக்கும், மாத்தளை மாவட்டத்தில் 56 பேருக்கும் நேற்று முன்தினம் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

# இஸ்லாமியர்களின் அடிப்படைவாதம் தமிழ் பிரிவினையைவிட ஆபத்தானது

## இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர



கொழும்பு, மே 03

தமிழ் பிரிவினைவாதத்தை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்கவே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆகவே, இவ்விடயத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயல்படும் என்று கப்பல் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர தெரவித்துள்ளார்.

சர்வதேச தொழிலாளர் தினமான நேற்று முன்தினம் மெய்நிகர் வழியில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "நாட்டு மக்கள் அனைவரும் பொது சட்டத்தை பின்பற்ற வேண்டும். பொது சட்டத்திற்கு புறம்பாக ஒரு தரப்பினர் செயல்படும்போது முரண்பாடுகள் மாத்திரம் தோற்றம் பெறும். தமிழ் பிரிவினைவாதம் நாட்டின் அரசமைப்பிற்கு முரணாக செயல்பட்டதால் பாரிய விளைவுகள் நாட்டில் தோற்றம் பெற்றன. 30 வருட கால யுத்தம் பல்வேறு தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பை நாட்டிலிருந்து இல்லாதொழித்தார்.

தமிழ் பிரிவினைவாதத்தை விட இஸ்லாமிய அடிப்படைவாதம் பாரதூரமானது. இதன் விளைவை 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவத்தின்ஊடாக விளங்கிக் கொள்ள முடிந்தது. இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு இதற்காகவே 69 இலட்சம் மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கத்தை தோற்றுவித்துள்ளார்கள் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கொரோனா வைரஸ் நெருக்கடி: இதுவரை இல்லாத பின்னடைவை சந்திக்கும் பிரதமர் நரேந்திர மோடி

சச்சின் கோகோய்

**பொ**துவாக நரேந்திர மோதி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி, தன் மீது வைக்கப்படும் விமர்சனத்தை கண்டு கொள்ளாது அல்லது விமர்சிப்பவர்கள் மீதே எதிர் விமர்சனத்தை வைத்து தன் மீதான விமர்சனத்தை மழுங்கடிக்கும்.

கொரோனா வைரஸ் இந்திய சுகாதார கட்டமைப்பின் மீது மிக அதிகப்படியான அழுத்தத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த கொரோனா நெருக்கடியை மத்திய அரசு கையாண்ட விதத்தை குறித்து மிகக் கடுமையான விமர்சனங்கள் எழுந்த போதும், பாரதிய ஜனதா கட்சி மேலே குறிப்பிட்டது போலவே தன் மீதான விமர்சனங்களை எதிர் கொண்டது.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் போதிய சிகிச்சை பெற முடியாமல், ஒட்சிசன் பெற முடியாமல் மருத்துவமனைகளில் படுக்கை வசதியை பெற முடியாமல் தொடர்ந்து உயிரிழந்து கொண்டிருந்த போதும், மத்திய அமைச்சர்கள் மருத்துவ வசதிகளில் எந்தவித பற்றாக்குறையும் நிலவவில்லை என மறுத்தனர்.

மருத்துவ சிகிச்சைக்காக சமூக வலைதளங்களில் பதிவு செய்பவர்கள் வெறுமனே பொய்யான செய்திகளையும் பயத்தையும் பரப்புவதாக சில ஆளும் கட்சித் தலைவர்கள் குற்றம்சாட்டினர்.

ஏற்கனவே இந்திய சுகாதார கட்டமைப்பு திணறிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இப்படி அரசு எதிர்வினை ஆற்றுவது நீண்ட காலத்தில் என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என தெரியவில்லை. தினம் தோறும் இந்தியாவில் இலட்சக்கணக்கான பேர் கொரோனா வால் பாதிக்கப்பட்டு வருவது மக்கள் மத்தியில் பெரும் கவலையை உண்டாக்கி இருக்கிறது.

இதற்கெல்லாம் யார் பொறுப்பு என மக்கள் கேட்கிறார்கள். கொரோனா நெருக் கடியை சமாளிக்கும் விதத்தில் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கருதுகிறார்கள் மக்கள்.

நரேந்திர மோடி தலைமை யிலான அரசின் மீதான விமர்ச னங்கள் வரலாறு காணாத அள வுக்கு வலுவடைந்து இருக்கின் றன. முதல்முறையாக நரேந்திர மோதி மற்றும் அவரது சகாக்கள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்ய வேண் டும் என சமூக வலைதளங்களில் அழுத்தமாக குரல்கள் ஒலிக்கத் தொடங்கி இருக்கின்றன.

கடந்த 2014ஆம் ஆண்டு நரேந்திர மோதி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், பலமுறை ஊடகங்கள், மக்கள் கூட்டமைப்புகள், எதிர்க்கட்சியினர் என பல தரப்பில் இருந்து பல கடுமையான விமர்சனங்களை எதிர் கொண்டிருக்கிறது.

உதாரணமாக கடந்த 2015 - 16 ஆண்டு காலகட்டத்தில் மைனாரிட்டிகள் மீது இந்து குழுக்கள் நடத்திய தாக்குதல்கள், 2016 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை, 2019 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது, அதே ஆண்டில் சி.ஏ.ஏ. சட்டத்தை கொண்டு வந்தது, 2020 ஆம் ஆண்டில் சர்ச்சைக்கு உள்ளான 3 புதிய வேளாண் மசோதாக்களை கொண்டு வந்தது என பல சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

கொரோனா நெருக்கடியை மோதி தலைமையிலான அரசு சரியாக கையாளவில்லை என்கிற விஷயத்தில் முன் வைக்கப்படும் விமர்சனங்களில், அவ்விமர்சனத்தின் தீவிரத்தன்மை மற்றும் தொனி கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

மோடி வெளியேற்றப்பட வேண்டும் அல்லது ராஜினாமா செய்ய வேண்டும் என மிக அரிதாகவே விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது அவ்விரு விமர்சனங்களும் ருவிட்டரில் கடந்த சில நாட்களாக டிரெண்டாகிக் கொண்டு இருக்கின்றன.

மோடி ராஜிநாமா (#ResignModi), பிரதமர் மோதி ராஜிநாமா (#Resign_PM_Modi), மோதி கட்டாயம் ராஜிநாமா செய்ய வேண்டும் (#ModiMustResign), மோடியை வெளியேற்றுங்கள் தேசத்தை காப்பாற்றுங்கள் (#ModiHataoDeshBachao) என பல ஹேஷ்டேகுகள் ருவிட்டரில் கடந்த பல நாட்களாக டிரெண்டாகிக் கொண்டிருக்கின்றன.

பொதுவாக பாரதிய ஜனதா கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு சமூக வலைதளங்களில் எழும் இதுபோன்ற விமர்சனங்களை மிக விரைவாக எதிர் கொண்டு அடக்கிவிடும். ஆனால் தற்போது எழும் மிகக் கடுமையான விமர்சனங்களை அடக்க முடியாமல் திணறுவது போல தெரிகிறது.

சமூக வலைத்தளங்களில் வெளிப்பட்ட அரசுக்கு எதிரான உணர்வு தற்போது பிரதான ஊடகங்கள், விமர்சகர்கள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் மத்தியிலும் பரவி இருப்பதாக தெரிகிறது.

பொதுவாகவே மோதி அரசை விமர்சிக்கும் ஆங்கில நாளிதழான ஹதி டெலிகிராஃப்', அரசின் முக்கிய தலைவர்கள் வெளியேற வேண்டுமென மிகக் கடுமையாக தன் கருத்தை தெரிவித்திருக்கிறது.



"இதை மிக எளிமையாக கூறுவது நல்லது: நரேந்திர மோதி வெளியேற வேண்டும். அமித் ஷா வெளியேற வேண்டும். அஜய் மோகன் பிஸ்த் எனப்படும் யோகி ஆதித்யநாத் வெளியேற வேண்டும்" என தெரிவித்திருக்கிறது.

"நாம் பிழைத்திருக்க தேவையான விஷயங்களை செய்யவும், இருக்கும் அமைப்பை சரி செய்யவும் இவர்கள் அதிகார மையத்திலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும்" என கூறி உள்ளது டெலிகிராஃப் பத்திரிகை.

இந்திய தேசிய காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் போன்ற சில எதிர்க்கட்சிகளும், பிரதமர் நரேந்திர மோடி பதவி விலக வேண்டும் என சமூக வலைத்தளங்களில் எழுந்த கருத்தை வழிமொழிகின்றன.

பல முன்னணி நாளேடுகளின் தலையங்கங்கள் மற்றும் கருத்துரை பகுதிகளில் இந்தியாவின் சுகாதார அமைப்பு சீர்குலைந்து போனதற்கு மோடியும் அவரது அரசும் தான் காரணம் என கூறியுள்ளார்கள்.

"இந்த பெருந்தொற்றின் பேரழிவுக்கு அரசின் மிகப் பெரிய வரலாறு காணாத தோல்வி தான் காரணம்" என 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு தன் கருத்தைப் பதிவு செய்திருக்கிறது.

அதோடு அரசின் மீது விமர்சனங்கள் வைக்கப் படுவதையும் கட்டுப்படுத்துவதாக குற்றம் சாட்டி இருக்கிறது. கொரோனா பெருந்தோற்று குறித்து எதிர்மறை எண்ணங்களை பரப்புபவர்களாக கருதப்பட்டால் அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என உத்திரப்பிரதேசத்தில் ஆளும் பா.ஜ.க. அரசு சமீபத்தில் எச்சரித்ததையும் அந்த கருத்துரையில் குறிப்பிட்டிருக்கிறது.

சில முன்னணி ஹிந்தி மொழி நாளேடுகளும், நரேந்திர மோடி அரசு மீது வலுவான விமர்சனங்களை முன் வைத்திருக்கின்றன. உதாரணத்துக்கு தைனிக் பாஸ்கர் என்கிற நாளேட்டின் தலையங்கத்தில் "மருந்துகள், மருத்துவமனை படுக்கைகள் மற்றும் தடுப்பூசிகள் பற்றாக்குறைக்கு அரசிடம் தொலைநோக்குப் பார்வை இல்லாததே காரணம்" என கூறி உள்ளது.

ஒட்டுமொத்த நாடே கொரோனாவால் தவித்துக் கொண்டிருக்கும் போது அரசு களத்தில் இறங்கி செயல்படவில்லை என இந்தியாவின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான சேகர் குப்தா தன் கருத்தை பதிவு செய்திருக்கிறார்.

"இதுபோல அரசு செயற்படாமல் இருந்ததை இந்தியா ஒரு போதும் கண்டதில்லை. அவசர உதவிக்கு அழைக்க எந்த வித கட்டுப்பாட்டு அறை எண்களும் இல்லை. உதவிக்கு அழைக்க பொறுப்பானவர்கள் யாரும் இல்லை. இது அரசின் நிர்வாக தோல்வி" என தனது ருவிட்டர் கணக்கில் பதிவிட்டு இருக்கிறார்.

சமூக வலைதளங்கள் மற்றும் பிரதான ஊடகங்களில் ஒரு சாரார் அரசை பலமாக விமர்சித்து கொண்டிருக்கும் போது, அரசுக்கு ஆதரவான ஊடகங்கள் குறிப்பாக தொலைக்காட்சி சேனல்கள் மோடி அரசின் செயற்பாடுகளை ஆதரித்து வருகின்றன.

பல ஹிந்தி மற்றும் ஆங்கில மொழி செய்தி சேனல்கள் கொரோனா நெருக்கடிக்கு காரணம் இந்தியாவில் இருக்கும் 'அமைப்புகளே' என, அவ்வமைப்பை கட்டுப்படுத்துவது யார் என விவரிக்காமல் குறை கூறத் தொடங்கி இருக்கிறார்கள்.

"இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் கொரோனா நெருக்கடிக்கு 'அமைப்பே' காரணம் என்றும், அதையே பொறுப்பாக்க வேண்டும் என்றும், பிரதமர் நரேந்திர மோடியோ, அரசோ காரணம் இல்லை" என கூறுமாறு தொலைக்காட்சி செய்தி சேனல்களுக்கு உத்தரவிடப்பட்டு இருப்பதாக இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளர் பவன் கேரா தன் ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

பா.ஜ.கவை வலுவாக ஆதரிக்கும் ரிபப்ளிக் டிவி சேனல், இந்த நெருக்கடியன காலகட்டத்தில் அரசின் செயற்பாடுகளை விமர்சிப்பவர்களை எதிர்மறை மனநிலை கொண்டவர்கள் என விமர்சித்திருக்கிறது. "தேசம் கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றுபட்டு இருக்கும் போது, ஒரு சிறிய விமர்சனக் குழு இந்தியாவின் முயற்சிகளை வீழ்த்த அனுமதிக்கலாமா? என கேள்வி எழுப்பியுள்ளது ரிபப்ளிக் டிவி.

இன்னும் சில ஊடகங்கள் பழியை பல்வேறு மாநிலங் கள் மீது திணிக்கத் தொடங்கி இருக்கின்றன. மாநில அரசுகள் கொரோனா நெருக்கடியை சரியாக கையாளவில்லை, மத்திய அரசின் திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்தவில்லை என குற்றம் சாட்டத் தொடங்கி இருக்கிறார்கள்.

உதாரணமாக, தைனிக் ஜாக்ரன் என்கிற இந்தி மொழி நாளேடு பத்திரிகை மத்திய அரசு மே 01-ம் தேதி முதல் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசியைச் செலுத்தும் திட்டத்தை அறிவித்த பின்னும், குறுகிய எண்ணம் கொண்ட அரசியல் காரணங்களால் சில மாநிலங்கள் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தயங்குவதாக கூறியுள்ளது. இதுவரை மாநில அரசுகளுக்கு மத்திய அரசு போதுமான அளவுக்கு கொரோனா தடுப்பூசிகள் கொடுக்கப்படாமல் இருக்கும் சூழலில் இந்த விமர்சனத்தை முன் வைத்திருக்கிறது அப்பத்திரிகை.

-நன்றி - பி.பி.சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவுத்திற வெளி வெறுமையும் கூட்டழிவு, அடக்குமுறை எதிர்ப்பின் பொதுப்படிம அவசியமும்...!

எழில்ராஜன்

வடக்கு, கிழக்கில் நினைவுத்திற வெளியின் வெறுமையின் தோற்றம் நினைவுச் சின்னங்களைப் பற்றி சிந்திக்கின்றபோது எழுவது நியாயமானது. ஈழத் தமிழ்த் தன்மையை அடையாளப்படுத்திப் பிரதிபலிக்கக்கூடிய வரலாற்றுச் சின்னங்கள் என்று சொல்லக்கூடியளவிற்கு தமிழ் மன்னர்களின் சிலைகளைத் தவிர வேறு எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாதுள்ளது. நினைவுத்திற வெளியின் வெறுமைத் தன்மை திட்டமிட்டு தக்க வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதை யாரும் அறியாமலில்லை.

முள்ளிவாய்க்காலில் உள்ள உருவச்சிலையும் ஒரு கூட்டு அழிவின் படிவமாக உள்வாங்கப்படவில்லை. இனப்படு கொலை சொல்லாடல் தொடர்பில் பல விவாதங்கள் இன்னும் தொடர்ந்து கொண்டிருந்தாலும், இனப்படுகொலை சொல்லாடல் திட்டமிடப்பட்டு தவிர்க்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

பின்முள்ளிவாய்க்கால் வரலாற்றில். இனப்படுகொலை தொடர்பான விவாதமும் மறுப்பும் நிராகரிப்பு நினைவுத்திற வெளியின் வெறுமையை தக்கவைப்பதற்கான உத்தியாக கையாளப்பட்டாலும், ஈழத்தமிழினத்தின் கூட்டழிவில் பொதுப்படிமம் ஒன்றை கட்டமைக்கப்பட வேண்டிய தேவை கட்டாயம் எழுந்துள்ளது. அந்த கூட்டுப்படிமத்தினைச் சுற்றிய அணிதிரட்டலின் இயங்குதலை அடக்குமுறை எதிர்ப்பிற்கான சக்தியாக மாற்றப்பட வேண்டியதன் அவசியத்தை காலம் உணர்த்திக் கொண்டிருக்கின்றது. பண்பாட்டில் படிமவியல் (Iconography) என்பது அவசியமாகின்றது.

2001 மார்கழி 6ஆம் திகதி மரீனா கடற்கரையில் 33 வருடங்களாக இருந்த கண்ணகி சிலை அகற்றப்பட்டது. அதற்கான கண்டனத்தை கலைஞர் கருணாநிதி பின்வருமாறு பதிவு செய்திருந்தார்: "கண்ணகி சிலை அகற்றப்பட்டது தமிழின் பெருமைக்கு இழுக்கு அல்லது சவால் விடுவதாகும்" எனவும் தமிழர்களை சிலை அகற்றியதற்கெதிராக ஓரணியில் திரண்டு போராடுமாறும் கோரியிருந்தார். சிலை அகற்றப்பட்ட 'வெறுமையை' திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போராட்டக் களமாக மாற்றியது. போராட்டக் களத்தில் இளம் பெண்கள் கண்ணகிகளாக தங்களை அழகுபடுத்தி போராட்டங்களில் பங்கெடுத்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து கண்ணகியை மையமாகக் கொண்ட பாரிய எழுச்சி ஊடகங்களில் எழுந்ததை குறிப்பாக கண்ணகியின் படிமங்கள் பன்முறை அணுகுமுறையில் அவதானித்திருக்கலாம். அதனைத் தொடர்ந்து தமிழ் சான்றோர் பேரவை ஐந்து கண்ணகி கோவில்களை திருநெல்வேலி, வாலியூர், தூத்துக்குடி, ஆழ்வார் திருநாகரி, கன்னியாகுமாரி போன்ற இடங்களில் கட்டுவதாக முன்மொழிந்திருந்தது. சிலை அகற்றப்பட்ட வெறுமையை கலைஞர் தமிழ்த் தேசியத்தை வலுவூட்டுவதற்காகப் பயன்படுத்தினார் (எம்.எஸ்.எஸ்.பாண்டியன் 2010). போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த பின்னர் கலைஞர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார், "இப்போராட்டமானது தமிழ்ப் பண்பாட்டை, கௌரவத்தை, மரபை பேணுகின்ற போராட்டமாக இருக்கின்றது."

யூத இனப்படுகொலையின் படிமங்கள் என்கின்ற நூலில் ஒரேன் பாருக் (Oren Baruck Stier 2015) குறிப்பிடுகின்றார், யூத இனப்படுகொலை தொடர்பில் நான்கு படிமங்களை கூட்டுப் படிமங்களாக முன்வைத்து ரயில் பெட்டி, Arbeit macht frei (தொழில் தான் ஒருவனை விடுதலை செய்யும்), ஆன் பிராங், 60 இலட்சம். இந்த நான்கு படிமங்களையும் அவர் வெறும் குறியீடுகளாக கையாளவில்லை. மாறாக படிமங்களாகக் கையாண்டு ஒரு படிமம், படிமமாக இருப்பதற்கு வரலாற்று உண்மையும்/களும் சூழமைவும் மிக அவசியமானவையாகும்.

சிறுவர்களுக்கெதிரான வன்முறையை, யூத இனப்படுகொலையின் பின்னணியில், இரு கைகளையும் உயர்த்திப் பிடித்தபடி, சரணடையும் சமிக்ஞையுடன் உள்ள 'வோர்சோ பையனுடைய' படிமம் ஏறக்குறைய சர்வதேச படிமமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு ஓவியர்களினால் சிறுவர்களுக்கெதிரான வன்முறையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அப்படிமம் பயன்படுத்தப்படுகின்றது. வோர்சோ பையன் தற்போது யூத இனப்படுகொலைப் பிரதிநிதித்துவத்தையும் தாண்டி, உலகில் சிறுவர்களுக் கெதிரான வன்முறையின் படிம பிரதிநிதித்துவமாகக் கட்டமைத்ததில் ஓவியர்களின் பங்கு மட்டுமல்ல யூத பிரசார இயங்குதளத்தின் ஒட்டுமொத்த கூட்டு முயற்சியே காரணம். வோர்சோ பையனின் படிமம் ஒரு பூகோள பிரதிநிதித்துவ படிமமானாலும் அதன் முதன்மைப் பிரதிபலித்தலும், பிரதிநிதித்துவப்படுத்தலும் யூத இனப்படுகொலையுடன் தொடர்புபட்டது.

முதன்மைப் பிரதிநிதித்துவத்திற்கூடாகவே இரண்டாம் பிரதிநிதித்துவப்படுதுதல் (பூகோள பிரதிநிதித்துவப்படுத்தல்) அணுகப்படுகின்றது. யூத இனப்படுகொலையின் வரலாற்றுப் பின்னணியில்தான், பூகோள பிரச்னையான சிறுவர்களுக்கு எதிரான வன்முறை பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. ஜப்பானிய ஓவியர் செற்சுகோ ஓனோ (Setsuko Ono) வோர்சோ பையனுடைய படிமத்தை 'எதிர்க்கும் சக்தி' யாக பிரதிபலித்தார். யூத இனப்படுகொலையின் அவலங்களைத் தாண்டி, அடக்குமுறைக்கெதிரான படிமமாக பிரதிபலித்தது தற்காலத்திலும் அதனது தொடர்பை, தேவையை சொல்லி நிற்கின்றது. யூத இனப் படுகொலைத் தருணத்தில் வன்முறை இடம்பெற்றது உண்மை. ஆனால், சிறுவர்கள் போராட்டத்திலும், எதிர்க்கும் சக்தியாகவும் இருந்தார்கள் என்பதைப் படிமமாக்குவது ஓனோவினுடைய உள்நோக்கமாக இருந்தது.

2012 இல் யூத இனப்படுகொலை மறுப்புத் தீவிரமடைந்தது. யூத இனப்படுகொலை மறுப்புப் பரப்புரையில் பல்வேறு தரப்பட்டவர்கள் இணைந்திருந்தார்கள். படுகொலை மறுப்புப் பரப்புரைகளுக்கு எதிர்வினையாற்றும் நோக்கில் இஸ்ரேலைச் சேர்ந்த மோஷிக்லின், கேலிச்சித்திர ஓவியர், வோர்சோ பையனை வரைந்திருந்தார். அக்கேலிச்சித்திரம், வோர்சோ பையன் முன் சட்டகத்திற்கு வெளியே கால் பதிப்பதாகவும், அதாவது வாகனத் தொடரணிக்கு வெளியே உள்ளதைப் போன்று, அதன் பின்னணியில் மூன்று நாசி இராணுவத்தினர் உள்ளனர். அவர்களில் இருவர் தங்களுடைய இயந்திரத் துப்பாக்கிகளை பையனை நோக்கி நீட்டுவதாகவும் மூன்றாவது இராணுவத்தின் பின்னணி யில் இருந்து பார்ப்பதைப் போன்றும் வரையப்பட் டுள்ளது. எபிரேயத்தில் எழுதப்பட்ட வாசகமாக, 'இதையும் இன்னொரு யூதக் கண்டுபிடிப்பாக யாராவது சொல்லக் கூடும்', லின் ஓவியத்தின் மூலம் யூத இனப்படுகொலை மறுப்புக்கெதிரான எதிர்ப்பை வெளிக்காட்டினார். Muriel Mezhnie Helfman என்கின்ற ஓவியர் வேர்சோ பையனுடைய படிமத்தையே யூத இனப்படு கொலைக்கான நீதிகோரிய கோணத்தில் வரைந்திருக்கின்றார். Avner Bar Homa என்கின்ற ஓவியர் விவிலியத்தில் உள்ள 'தலைமுறை' என்ற சொல்லுடன், மரணத் திற்கான தூதனுடைய படிமத்துடன் வோர்சோ பையனையும் இணைத்து யூதச் சிறுவர்களின் இனப்படுகொலையினூடாக தலைவிதியை விபரித்து அதே நேரம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கடத்தப்படும் வண்ணம் ஓவியப்பாணி அமைகின்றது. அதேநேரம் வேறு சில ஓவியர்கள் யூத இனத்தின் அடையாளத்தை வலுப்படுத்துவதற்காகவும், யூதத்தன்மையின், யூத இனத்தை அடையாள ரீதியில் ஒருங்கிணைப்பதற்காகவும் வோர்சோ பையனை வரைந்திருக்கின்றார்கள். உ-ம் அடையாளத்தை உறுதிப்படுத்த, தொப்பியிலோ அல்லது மேலுடையிலோ வெள்ளி (*) அடையாளத்தையிட்டு, யூத அடையாளத்தை வலுப்படுத்தியுள்ளனர். R.Schloss க்கும் M.J.Toomy போன்றவர்களுக்கு வோர்சோ பையன் யூத இனப்படுகொலையில் தங்கள் கனவுகள் நிறைவேறாது இழந்து போன, சந்தர்ப்பங்கள் மறுக் கப்பட்ட எல்லாச் சிறுவர்க ளையும் குறித்து நிற்கின்றது. ஊ.டுயவரகக ம் யுவெரநெளம், இவர்கள் இருவரும் வோர்சோ பையனுடைய படிமத்தை தற்போதைய இஸ்ரேல் - பலஸ்தீன பிரச்சினையின் சூழமைவில் பிரதிபலிக்கும் போது ஒரு அரசியல் செய்தியையும் சொல்ல முயன்றிருக்கின்றார்கள். யூத இனப்படுகொலையை எதிர்கொண்ட இஸ்ரேல் தேசம் எவ்வாறு இன்னொரு பலஸ்தீன தேசத்தை அடக்கமுறைக்குள்ளாகக் முடியும் என்று. யூத இனப்படு கொலையை அனுபவித்த சாட்சிகள் இல்லாமலேயே போய்விட்ட சந்தர்ப்பத்தில் மேற்குறிப்பிட்ட வோர்சோ பையனின் படிமம் கூட்டு நினைவுத்திறத்தையும், கூட்டு அடையாளத்தையும், கூட்டு அடக்குமுறைக்கெதிரான எதிர்ப்பையும் தலைமுறைக்கும் கடத்திக் கொண்டிருக் கின்றது.

ஜோன்.டி.அலிசரா (JoAnn D' Alisera 2002) தன்னுடைய கட்டுரையில் தாய்நாட்டுக்காக ஏங்குதலின் படிமங்கள் என்ற தலைப்பில் சியரா லியோனின் புலம்பெயர் மக்களுடைய தாய்நாட்டிற்கான ஏக்கத்தையும், நினைவு திறத்தையும் எவ்வாறு ஒரு பருத்தி பஞ்சு மரம் பிரதிபலித்து பிரதிநிதித்துவப்படுத்துவதாக குறிப்பிடுகின்றார். தாய்நாடு கடந்து புலம்பெயர் தேசங்களில் வாழும் தாய்நாட்டுக் கனவு பற்றிய ஏக்கமும் அரசியல் தஞ்ச வாழ்க்கையின் நினைவுத்திறமும், தாய்நாட்டைப் பிரிந்த ஏக்கமும், தாய்நாட்டில் தொடர்புகளைப் பேண வேண்டும் என்ற தாகமும், புலம்பெயர் தேசங்களில் இருந்த தலைமுறையினரின் வேர்களைத் தேடிய பயணமும், தளிந்த கூட்டான அடையாளக் கட்டமைப்பும், குறிப்பாக 'வீடும்', 'இழக்கப்பட்ட வீடும்' இந்த சொல்லாடல்கள் மேல் கட்டமைக்கப்படும் தனி, கூட்டு அடையாளமும் சியாராலியோன் புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களுக்கு மிக முக்கியமானதாக உள்ளதாக ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

நாடு கடந்த நிலையில் அல்லது நாடு கடத்தப்பட்ட நிலையில் தாய்நாட்டிற்கு திரும்ப வேண்டும் என்ற ஏக்கம், அதன் விளைவாக ஏற்படும் வலி, அவற்றை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் சொல்லாடல்களும், அவர்கள் வாழ்ந்த நினைவுகளுடன் சேர்த்து சொல்லாடல்களாக கட்டமைக்கப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு புலம்பெயர் தேசங்களில் தங்களுக்கான தனித்துவ அடையாளத்தை உருவாக்கு கின்றன. "நாங்கள் எப்போதுமே எங்களுடைய நினைவுத் திறத்தை மீட்டுக் கொள்கின்றோம். தற்போதைய அடை யாளத்திற்கு பொருந்துவதாக' (ஜோன் கிபிஸ் 1994). இதுவே நாங்கள் அடையாளத்தை, எங்களுடைய நினைவுத் திறத்திற்கு ஏற்றாற் போல் கட்டமைக்கின்றோம் எனவும் கொள்ளலாம்.

இவ்வாறான தாயகத்திற்கும், புலம்பெயர் தேசங்களில் வாழும் ஈழத்தமிழர்களை ஈழத்தமிழ்த்தன்மையில் ஒருங்கிணைத்து, அணி திரட்டக்கூடிய பொதுப்படிமத்திற்குரிய வெளி வெறுமையாகவே இருக்கின்றது. அவ்வாறான பொது படிமத்திற்கான தேவை, பல்வேறு கோரிக்கைகளில் உ-ம் வோர்சோ பையனைப் போல், ஈழத் தமிழர்களை ஒன்றிணைக்கக்கூடிய அவசியம் தற்போது எழுந்துள்ளது. அவ்வாறான படிமம் ஈழத் தமிழின விடுதலையை மையங் கொண்டதாக, அனைவரையும் உள்வாங்கி தாயகத்திலும், தாயகத்திற்கு வெளியேயும் பல தளங்களில் அணிதிரட்டுவதற்குரிய இயங்கு தளத்தை உருவாக்கும்போதுதான் அடுத்த கட்டத்திற்கு இன்னோர் அடியை எடுத்து நகரமுடியும். **நன்றி:மாற்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**


மாதிரிப் பரீட்சை - 1 நேரம் - 45 நிமிடம்
வினாத்தாள் I,II ஆசிரியர் - மு.வே.அன்பழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37)


A


B



C



D


1. BACD   2. BDAC   3. CDAB


* தரப்பட்ட உருக்களை இரு கூட்டங்களாக வேறுபடுத்தலாம் அவ்வாறு வேறுபடுத்தும் சரியான விடையைத் தெரிவு செய்க.

38)


A



B


C


D


1. AC ,BD   2. AB ,DC   3. AD ,CB

39)


A


B


C


D


E


F

1. CD, EA, FB   2. AC, BF, DE   3. FC, DA, BF

* வெற்றிடத்தில் வரும் கிழமைகளைத் தெரிவு செய்க.

40) ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை, ..................... , .....................

1. ***செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை***
2. ***திங்கட்கிழமை, புதன்கிழமை***
3. ***ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை***

* * *

**01)** பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பாடலில் இருந்து விடை எழுதுக.

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

i. கல்வியை நாம் எவ்வாறு கற்க வேண்டும்? ..................................

ii. பாடலில் உள்ள இணைமொழி யாது? ..................................

iii. இவ்வுலகில் பெரிதாக விளங்கும் தருமம் எது? ..................................

iv. முன்னிலைப் பன்மை பெயர்ச்சொல் யாது? ..................................

v. உயர்திணை ஆண்பாற் பெயர் யாது? ..................................

vi. 'அறம்' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. ..................................

vii. 'தீமை' என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக. ..................................

viii. ஒற்றைக் கொம்பும் அரவும் வந்த சொல்லை எழுதுக. ..................................

**02)** சரியான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
i. திருமனம், திருமணம், திறுமணம்   ii. வளர்சி, வளர்ச்சி, வளற்ச்சி

**03)** வேறுபட்ட கருத்துடைய சொல்லின் கீழ்க் கோடிடுக.
i. இன்னல், இன்பம், உவகை, மகிழ்ச்சி   ii. வனம், அடவி, வானம், காடு

**04)** பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்பினுள் அடையாளம் இடுக.

i. 'நண்பர்கள்' உயர்திணைப் பன்மைப் பெயர்ச்சொல்லாகும். (    )
ii. 'திரும்பினார்' என்பது நிகழ்காலப் பன்மை வினைமுற்றாகும். (    )

**05)** "பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்''

என்னும் பாடலடிகள் உணர்த்தும் பழமொழி யாது? ..................................

**06)** தரப்பட்ட சொற்றொடருக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

i. ஒரே வகுப்பில் ஒன்றாகக் கல்வி கற்பவர் ..................................
ii. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது ..................................
iii. சுதந்திரமற்று வாழ்பவன் ..................................

ஈழநாடு



# அரசின் சிங்கள – பௌத்த மயமாக்கல் கொள்கைக்கு துணைபோகின்றதா வட மாகாண சுகாதார அமைச்சு?

## - கேள்வி எழுப்புகிறார் ரவிகரன்



முல்லைத்தீவு,மே.03

**பேரினவாத சிங்கள ஆட்சியாளர்களின் சிங்கள மற்றும் பௌத்த மயமாக்கல் செயல்பாட்டிற்கு வடமாகாண சுகாதார அமைச்சும் அதன் அதிகாரிகளும் துணைபோகின்றார்களா? என முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக பகுதியான மணலாறு (வெலி ஓயா) பகுதியில் அண்மையில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் சித்த மத்திய மருந்தகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு திறந்துவைக்கப்பட்டுள்ள சித்த மருந்தகத்தின் பெயர்ப் பலகையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன், தமிழ் மொழி இரண்டாம் நிலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை- குறித்த திறப்புவிழா நிகழ்விற்கு மதகுருக்களின் சார்பில் பௌத்த மதகுரு ஒருவரே அழைக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

"முல்லைத்தீவு மாவட்டத்தின் தமிழர்களின் பூர்வீக மணலாறு (வெலி ஓயா) பகுதியில் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் கடந்த 30.04.2021 அன்று சித்த மத்திய மருந்தகம் ஒன்றினைத் திறந்துவைத்துள்ளது.

குறிப்பாக வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்தியர் திருமதி. ஜெமநாமகணேசன் கனகேஸ்வரி இந்த சித்த மத்திய மருந்தகத்தின் பெயர்ப் பலகையினை திரைநீக்கம் செய்து மக்கள்பாவனைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்துவைத்துள்ளார்.

இந் நிலையில் இவ்வாறு திறந்துவைக்கப்பட்டுள்ள குறித்த சித்த மத்திய மருந்தகத்தின் பெயர்ப்பலகையில்சிங்களமொழி முன்னுரிமைப் படுத்தப்பட்டுள்ளதுடன் தமிழ் மொழி இரண்டாம் நிலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் தாயகப் பரப்புக்களில் ஒன்றான வடமாகாணத்தில் தமிழ் மொழி ஓரங்கட்டப்படுவதையும் சிங்களம் முன்னுரிமைப் படுத்தப்படுவதையும் ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக தமிழர்களின் பூர்வீக மணலாற்றுப் பகுதியை திட்டமிட்டு சிங்களப் பேரினவாத அரசு ஆக்கிரமித்துள்ளது. மகாவலி (எல்) முதலான அரச திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர்களின் பூர்வீக மணலாற்றுப் பகுதியில் தற்போது அதிகளவில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

தமிழர்களின் மணலாறு தற்போது சிங்களப் பேரினவாத அரசினால் வெலி ஓயாவாக மாற்றப்பட்டுள்ளது. மணலாறு வெலி ஓயாவாக மாற்றப்பட்டு அங்கு சிங்கள மக்கள் அதிகளவில் குடியேற்றப்பட்டுள்ளார்கள் என்பதற்காக அங்கு சிங்கள மொழியினை முன்னுரிமைப் படுத்த ஒருபோதும் இடமளிக்க முடியாது.

தமிழர்களுக் குரித்தான, தமிழர்கள் அதிகம் வாழும் வடமாகாணத்தில் தமிழ்மொழியே முன்னிலைப் படுத்தப்பட வேண்டும்.

அதிகமாக சிங்கள மக்கள் வசிக்கக்கூடிய தென்னிலங்கையின் பல பகுதிகளில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றார்கள் அவ்வாறு தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்றார்கள் என்பதற்காக அப்பகுதிகளில் தமிழ் மொழி முன்னிலைப்படுத்தப் படுவதில்லை. அவ்வாறிருக்க தமிழர்களே அதிகமாக வசிக்கின்ற வடமாகாணத்தில் எவ்வாறு சிங்கள மொழியினை முன்னுரிமைப் படுத்த முடியும்?

அதேவேளை இந்த திறப்புவிழா நிகழ்விற்கு மத குருக்களின் சார்பில்இ ஒரு பௌத்த பிக்கு மாத்திரமே அங்கு கலந்துகொண்டுள்ளார். ஏனைய மதங்களின் மத குருக்கள் குறித்த நிகழ்வில் ஓரங்கட்டப்பட்டது ஏன்? என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

மேலும் குறித்த சித்த மத்திய மருந்தகமானது மத்திய அரசினால் அங்கு திறந்துவைக்கப்படவில்லை. வடமாகாண சுகாதார அமைச்சின்கீழான, சுதேச மருத்துவத் திணைக்களத்தினாலேயே அங்கு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

எனவே இங்கு வடமாகாண சுகாதார அமைச்சும், வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் அவற்றின் அதிகாரிகளும் இந்த பேரினவாத அரசின் சிங்கள மற்றும் பௌத்த மயமாக்கல் செயற்பாட்டிற்கு துணைபோகின்றனரா என்ற கேள்வியும் எழுகின்றது" எனத் தெரிவித்துள்ளார்.

# 75 பயணிகள் மட்டுமே விமானங்களில் வரலாம்

கொழும்பு, மே.03

இலங்கைக்கான விமான சேவையில் ஈடுபடும் அனைத்து விமான நிறுவனங்களும் தமது பயணிகளின் எண்ணிக்கையை 75 ஆக மட்டுப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது இன்று திங்கட்கிழமை முதல் 14 நாட்களுக்கு அமுலில் இருக்கும், மேலும் 14 நாட்களுக்குப் பிறகு நிலை மதிப்பாய்வு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தல்

கொழும்பு, மே 03

நாட்டின்சில பகுதிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் அமுலாகும் வகையில் தனிமைப் படுத்தப்பட்டன.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தலை பொலிஸ் அதிகாரப் பிரிவு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தின் உவர்மலை மற்றும் அன்புவழிபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும்தனிமைப்படுத்தப்பட்டன.

பாணந்துறை தெற்கு பிரதேசத்தின் வடக்கு வேகடை, கிரிபேரிய மற்றும் கிழக்கு பாலமுல்லை கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டன. நுவரெலியா மாவட்டத் தின் நீலதண்டாஹின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனி மைப்படுத்தப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 187 பேர் சிக்கினர்

கொழும்பு, மே 03

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிச் செயல்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் மேலும் 187 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களில் அதிகமானவர்கள் திருகோணமலை மாவட்டத்திலேயே கைது செய்யப்பட்டனர் என அவர் தெரிவித்தார்.

இதற்கமைய இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 4 ஆயிரத்து 642 பேர் கைது செய்யப்பட்டனர். (எ)

# உலகத் தொழிலாளர் தினமும் பழமரக்கன்று நாட்டும் நிகழ்வும்

ஹற்றன், மே 03

தொழிலாளர் தினத்தை யொட்டி தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொடியேற்றலும் பழமரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு ஹற்றன் லெதண்டி தோட்டத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

தொழிலாளர் தேசிய முன்னணியின் நோர்வூட் பிரதேசசபை உறுப்பினர் மு.ராமச்சந்திரனின் தலைலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தோட்ட சிறுவர் நிலைய வளாகத்தில் 20 பழமரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டது.

நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் நோட்டன் பிரதேச அமைப்பாளர் நந்தகுமார், லெதண்டி தோட்ட தலைவர் சங்கரலிங்கம் நோர்வூட் காரியாலய உத்தியோகஸ்தர் திருமதி. இந்திர காந்தி உட்பட சங்கத்தின் அங்கத்தினர் ஆதவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இயற்கையை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் இன்றைய நாளில் மரக்கன்றுகள் நாட்டப்பட்டதுடன் கொரோனா தொற்றிலிருந்து நாடு, உலகம் விடுபட வேண்டியும் இந்தியாவில் கொரோன தொற்றுக் குள்ளானவர்கள் சுவாசிக்க ஒட்சிசன் இன்றி மரணிக்கும் துயர சம்பவத்தை நினைவுகூர்ந்த தொழிலாளர் தினத்தில் பழமரக்கன்றுகள் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முதலாவது தடுப்பூசியை பயன்படுத்தியவர்களும் பாதிக்கப்படலாம்

## - சுதத் சமரவீர எச்சரிக்கை



கொழும்பு, மே 03,

முதலாவது டோஸ் கொரோனா வைரஸ் தடுப்பூசியை பயன்படுத்தியவர்களும் வைரசினால் பாதிக்கப்படலாம் என தொற்றுநோயியல் நிபுணர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.

முதலாவது தடுப்பூசிபயன்படுத்தி 12 வாரங்களிற்கே அது பயன்படுத்தியவருக்கு பாதுகாப்பை வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது 'டோஸ்' தடுப்பூசியை பயன் படுத்தியவர் மீண்டும் தொற்றிற்கு ஆளாகலாம் எனினும் முன்னர் பயன்படுத்திய மருந்து அவர் மோசமாக பாதிக்கப்பட்டு உயிரிழப்பதை தடுக்கும் என சுடத்சமரவீர தெரிவித்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான சூழ்நிலைகளை அமெரிக்கா எதிர்கொள்ளும்!

## வட கொரியா எச்சரிக்கை

பியொங்யாங், மே 03

அமெரிக்கா மிகவும் மோசமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று வடகொரியா நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடன் தனது அண்மைய உரையில் வடகொரியா ஒரு பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியதுடன், அதற்கான தமது விரோத கொள்கையினை வெளியிட்டார். இதையடுத்து இந்த அறிவிப்பை வடகொரியா நேற்று விடுத்தது.

கடந்த வாரம், ஜோ பைடன் அமெரிக்கா காங்கிரஸூக்கான தனது முதல் உரையில், வட கொரியா மற்றும் ஈரானின் அணு சக்தி திட்டங்களை "அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் உலக பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தல்" என்று கூறினார். மேலும், இராஜதந்திரம் மற்றும் கடுமையான தடுப்பு மூலம் அந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண நட்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதாகவும் தெரிவித்தார்.



இந் நிலையில் அது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள, வட கொரிய வெளியுறவு அமைச்சகத்தின் மூத்த அதிகாரி குவான் யொங் கன், "அரை நூற்றாண்டுக்கும் மேலாக அமெரிக்கா தொடர்வதைப் போலவே வடகொரியா மீதான விரோதக் கொள்கையை தொடர்ந்து செயல்படுத்துவதற்கான பைடனின் நோக்கம் அவரின் அறிக்கை தெளிவாக பிரதிபலிக்கிறது.

அமெரிக்கா தலைமை நிர்வாகி இன்றைய பார்வையின் வெளிச்சத்தில் ஒரு பெரிய தவறு செய்தார் என்பது உறுதிவிட்டதனால் காலப்போக்கில் அமெரிக்கா மிகவும் மோசமான சூழ்நிலையை எதிர்நோக்க நேரிடும் என்றார். (ஐ)

## கிளர்ச்சியாளர் பகுதியிலும் சிரியாவில் தடுப்பூசி ஏற்றல்!

இட்லிப், மே 04

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் சனிக்கிழமை தொடங்கின.

அந்த நாட்டின் இத்லிப் மாகாணத்தில், கிளர்ச்சியாளர்கள் வசம் கடைசியாக இருக்கும் இத்லிப் நகரில் துருக்கி வழியாகக் கொண்டு வரப்பட்ட அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகள் மருத்துவப் பணியாளர்கள் உள்ளிட்டோருக்கு செலுத்தப்பட்டது.

அந்தப் பகுதியில் அண்மைக் காலமாக கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ளது. இதைத் தொடர்ந்து, ஐ.நா.வின் கோவக்ஸ் திட்டத்தின்கீழ் இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. 4 இலட்சம் பேரை கொண்ட கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் 21 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஐ)

## ஒட்சிசன் தயாரிப்பு முறைகளை கூகுளில் தேடுகின்ற இந்தியர்கள்

### வீடுகளில் முயற்சிப்பதால் ஆபத்து

புதுடில்லி, மே 03

மருத்துவ ஒட்சிசனை மக்கள் வீடுகளில் தயாரிக்க முயற்சிப்பது ஆபத்தானது என்று இந்திய மருத்துவ நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

இந்தியாவில் மருத்துவ ஒட்சிசன் வாயுவுக்கு ஏற்பட்டிருக்கின்ற பெரும் தட்டுப்பாட்டால் உயிர்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. கறுப்புச் சந்தையிலும் வாங்க முடியாத பொருளாக ஒட்சிசன் மாறியுள்ளது.

இதனால் தங்கள் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக பலரும் தாங்களாகவே ஒட்சிசனைத் தயாரிக்கும் பரீட்சையில் இறங்கிஉள்ளனர்.

இலகுவாக ஒட்சிசன் தயாரிக்கும் முறை என்று விளக்குகின்ற காணொலி சமூகவலைத் தளங்களில் வைரலாகப் பரவிவருகின்றன என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

"கூகுள்" தேடு தளங்களில் "வீட்டில் ஒட்சிசன் தயாரிப்பது எப்படி" எனத் தேடுவோரின் எண்ணிக்கை சடுதியாக மிகவும் அதிகரித்திருக்கிறது என்று "ரொய்ட்டர் இந்தியா"செய்திச் சேவை தெரிவித்திருக்கிறது.

ஒட்சிசன் தயாரிப்பு முறைகளை விளக்குகின்ற யூரியூப் காணொலிகளும் புதிதாகப் பல மில்லியன் பார்வைகளைப் பெற்றுள்ளன என்று கூறப்படுகிறது. செறிவூட்டிகள் மூலமாகமருத்துவ ஒட்சிசனைத் தயாரிப்பதற்கு என்று விஞ்ஞான பூர்வமான முறைகள் உள்ளன. மாறாக வேறு வழி முறைகளில் ஒட்சிசன் வாயுவைத் தயாரிக்க வீடுகளில் முயற்சிப்பது உயிராபத்தான வெடிப்புகள் மற்றும் நச்சு வாயு ஆபத்துகளை ஏற்படுத்தி விடலாம் " என்று இந்திய மருத்துவ சங்கத்தின் தென்னிந்திய செயலாளர் ஏ. ரவிக்குமார் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய தகவலில் எச்சரிக்கை செய்துள்ளார்.

வீடுகளில் ஒட்சிசன் வாயு தயாரிப்பது" பரீட்சிக்கப் படாத, நம்பமுடியாத வழி முறை" என்று சென்னை தொற்றுநோயியல் நிலையத்தைச் சேர்ந்த அறிவியலாளர் தருண் பட்நாஹர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## அமெரிக்காவில் துப்பாக்கி சூடு: 7 பேர் காயம் தாக்குதல்தாரி கைது

நியூயோர்க், மே. 03

அமெரிக்காவின், விஸ்கொன்சின் மாநிலத்தில் நடந்த துப்பாக்கி சூட்டில் குறைந்தது 7 பேர் காயமடைந்தனர் என்று அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விஸ்கொன்சின் கிரீன் பேயில் அமைந்துள்ள கேசினோ நிலையமொன்றிலேயே அந் நாட்டு நேரப்படி சனிக்கிழமை இரவு 8 மணியளவில் இந்த துப்பாக்கி சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டையடுத்து சுமார் 50 முதல் 60 வரையான பொலிஸார் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் தெளிவாகக் கூறப்படாத நிலையில், குறித்த நிலையத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவரால் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்திய நபரை பொலிஸார் கைது செய்தனர். (ஐ)

## இந்தியாவுக்கு உதவ தயார்! மீண்டும் அறிவித்தது சீனா!!

பீஜிங், மே 03



தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் தனது அனுபவங்களை இந்திய சுகாதார நிபுணர்களுடன் பகிர்ந்து கொள்ள தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கரை வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்டு பேசிய சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி இந்தியாவுக்கு உதவ சீனா தயாராக இருப்பதாக மீண்டும் தெவித்தார்.

இதேவேளை, தொற்று நோயின் கோரப் பிடிக்குள் சிக்கி இந்தியா திண்டாடி வரும் நிலையில் இந்தியாவுக்கான தமது ஆதரவை சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமருக்கு தனது அனுதாபச் செய்தியையும் ஜி ஜின்பிங் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பிவைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 9 கோடி ரூபாய்க்கு ஏலம்போன சிரிக்கும் சிறுமியின் புகைப்படம்

நியூயோர்க், மே 03

வீடு தீப்பற்றி எரிவதைப் பார்த்து சிரிக்கும் சிறுமியின் புகைப்படம் 8 கோடியே 75 இலட்சம் இலங்கை ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் 2005ஆம் ஆண்டு ஜூரோத் என்ற 10 வயது சிறுமி தீப்பற்றி எரியும் தனது அயல் வீட்டை தீயணைப்பு படையினர் அணைப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டு வீதியில் நின்றார்.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமியின் முகத்தில் புன்னகை படர்ந்திருந்தது. இந்தக் காட்சியை அவரின் தந்தை டேவ் புகைப்படமாக எடுத்தார். அதனை, 'டிசாஸ்டர் கெல்' என்று தலைப்பிட்டு தனது சமூகவலைத்தளத்தில் பதவிட்டார். இந்தப் புகைப்படம் சமூகவலைத் தளத்தில் பிரபலமானது.



இந்நிலையில், தற்போது அந்தப் புகைப்படத்தின் உண்மைப் படத்தை ஏலத்தில் விற்பனை செய்தார் அப்போதைய சிறுமியான - தற்போது 21 வயதான ஜூரோத். அந்தப் படம் 4 இலட்சத்து 73 ஆயிரம் டொலர்களுக்கு - நம் நாட்டு மதிப்பில் சுமார் 8 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

இந்தப் பணத்தை தனது படிப்பு செலவுக்கும், நற்பணிகளுக்கும் பயன்படுத்தவுள்ளார் என்று ஜூரோத் என தெரிவித்தார். (ஐ)

## இந்தியாவில் 400,000ஐ அண்மிக்கிறது தொற்று

புதுடில்லி, மே 03

இந்தியாவில் நேற்று மேலும் 3,92,469 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், 3,984 கொரோனா மரணங்களும் நேற்று காலை வரை பதிவாயின.

புதிய தொற்று நோயாளர்களுடன் இந்தியாவில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1 கேடியே 95 இலட்சத்து 49 ஆயிரத்து 656 -ஆக உயர்ந்துள்ளது. கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தோர் எண்ணிக்கை 2 இலட்சத்து 15 ஆயிரத்து 523- ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, நேற்று 3 இலட்சத்து 8 ஆயிரத்து 522 பேர் குணமடைந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையில் மொத்தமாக குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கேடியே 59 இலட்சத்து 81 ஆயிரத்து 772-ஆக பதிவாகியுள்ளது.

தற்போது நாடு முழுவதும் 33 இலட்சத்து 43 ஆயிரத்து 910 பேர் தொற்று நோய் பாதிப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் இந்திய மத்திய சுகாதார அமைச்சு நேற்றுக் காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு தபால் நிலையத்தில் 21 ஊழியர்களுக்கு கொரோனா

கொழும்பு,மே 03

கொழும்பு - கொம்பனித் தெரு தபால் நிலையத்தின் ஊழியர்கள் 21 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

45 ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# 25 வீதமான தனியார் பேருந்துகளே இன்று முதல் சேவையில் ஈடுபடும்!

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, மே 03

இன்று திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத தனியார் பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடவுள்ளன என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

“நாட்டில் கொரோனாக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக வகுப்புகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அலுவலகங்களுக்குக் குறைந்த எண்ணிக்கையிலேயே ஊழியர்கள் அழைக்கப்படுகின்றனர். இதன் காரணமாக பேருந்துகளில் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இதன் காரணமாக பேருந்துகளின் எரிபொருள் செலவுக்கேனும் போதுமான வருமானத்தை ஈட்ட முடியாத நிலைக்கு பேருந்துஉரிமையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு நாளை திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 25 வீத பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த முடிவெடுத்துள்ளோம்” - என்றார்.

இதனிடையே பேருந்து சேவையை மட்டுப்படுத்த இலங்கை போக்குவரத்துச் சபையும் முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. பயணிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாலும், பல ஊழியர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியமையாலும் இலங்கை போக்குவரத்துச் சபை இந்த முடிவை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கின்றது.

எனினும், பயணிகள் சிரமத்துக்கு ஆளாகாத நிலையில் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இலங்கை போக்குவரத்து சபை உறுதியளித்துள்ளது. (ஐ)

# அமைதிவழி போராட்டங்களுக்கு தடை: கருத்து சுதந்திரத்தை மீறும் செயலாகும்!

## ஊடக அமைப்புகளின் ஒன்றியம் கண்டனம்

கொழும்பு, மே03

**இலங்கையில் அமைதி வழிப் போராட்டங்களை நிகழ்த்துவதற்கான உரிமையைப் பறிப்பதானது கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல்பாடாகும் என்று ஊடக அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

குறித்த ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில், பிரமுகர் வாகனத் தொடரணிக்கு அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவித்த இளைஞர் கைது செய்யப்பட்டமைக்கு ஊடக அமைப்புகளின் ஒன்றியம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற கைது நடவடிக்கைகள் காரணமாக பொது மக்களின் அமைதிவழிப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை மற்றும் சுதந்திரம் மீறப்படுகின்றன எனவும் ஊடக அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியின் போக்குவரத்து தடைசெய்யப்பட்டு, பிரமுகர் வாகனத் தொடரணிக்கு விசேட வாய்ப்பு வழங்கியதற்கு எதிராகவே குறித்த இளைஞரின் தலைமையில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது எனவும் குறித்த ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் எந்தவொரு நடவடிக்கைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்க ஒவ்வொரு பிரஜைக்குமான உரிமை அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசமைப்பால் உறுதியளிக்கப்பட்ட கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் பேச்சுரிமைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பல்வேறு கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன எனவும் ஊடக அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து, இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

# கிரிக்கெட் வீரர் தரங்கவுக்கு தொற்று

கொழும்பு, மே 03

இலஙகை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களில் ஒருவரான உபுல் தரங்கவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா 3ஆவது அலை தொற்று பரம்பல் அதிகரித்து வரும் நிலையில் தினமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு வருகின்றது. (ஐ)

# ஒட்சிசனுக்கு தடுப்பாடு ஏற்பட்டால் சிங்கப்பூரில் இருந்து இறக்குவோம்!

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும

கொழும்பு, மே 03

“இலங்கையில் ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படும்போது, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வது குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளது.” - இவ்வாறு அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கையில் ஒட்சிசன் தயாரிக்கும் நிறுவனங்களின் திறன் மற்றும் கையிருப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அவசியமான அளவு ஒட்சிசன் இதுவரையில் கையிருப்பில் உள்ளது. மருத்துவமனைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த, ஏனைய இடங்களிலும் ஒட்சிசன் வழங்கக்கூடிய வசதிகளை ஏற்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது” - என்றார். (ஐ)

# தொல்லியல் இடமான புளுட்டுமானோடைக்கு கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் விஜயம்!

மட்டக்களப்பு, மே 03

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட ஈரளக்குளம் புளுட்டுமானோடை பகுதியில் உள்ள பண்டைய வரலாற்றுடன் தொடர்புபட்ட பிரதேசத்தினை அண்மையில் அரச அதகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பௌத்த பிக்குகள் வருகை தந்து பார்வையிட்டு அவ்விடத்தில் பௌத்த மத்தியஸ்தானம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்து இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகள் அவ்விடம் கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கோ.கருணாகரம், இரா.சாணக்கியன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா. சிறிநேசன், கிழக்கு மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா உட்பட பலர் இதன்போது சென்றிருந்தனர்.

குறித்த பிரதேசத்தின் நிலைமைகள் மற்றும் சூழமைவுகள் தொடர்பில் இவர்கள் பார்த்து பரிசீலித்தனர். இப்பிரதேசம் பண்டைய வரலாற்றுடன் தொடர்புபட்ட பிரதேசமாக இருப்பதுடன் பல செதுக்கல்கள், படி அமைப்புகள் போன்றனவும் இங்கு அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பிரதேசம் தொல்பொருள் சார்ந்த பிரதேசமாக இருந்தாலும், இதனை வைத்து இது பௌத்தத்திற்குரியது என்று சொல்லி பௌத்த விடயங்களை முன்னெடுப்பதை நோக்காகக் கொண்டு அரசு செயல்பட முனையக் கூடாது, அதிகாரிகளும் அவ்வாறான செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கக் கூடாது, அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படின் அதற்கெதிரான நடவடிக்கைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் என்ற அடிப்படையில் ஊடகங்கள் வாயிலாக அவரவர் கருத்துக்களை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பலப்பட்டி ஆதார வைத்தியசாலையில் 9 மருத்துவ பணியாளருக்கு தொற்று!

கொழும்பு, மே 03

காலி - பலபிட்டி ஆதார வைத்தியசாலையில் மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள் உட்பட 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலையின் சுமார் 20 ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக பலபிட்டி வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

அதேபோல் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த 10 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் காலி நகர் பகுதியில் 12 கொரோனா தொற்றாளர்களும், ஹபராதுவையில் 15 பேரும், எல்பிடியவில் 11 பேரும், இமதுவ மற்றும் நியாகம ஆகிய பிரதேசங்களில் 10 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

# வீடுகளில் விருந்துகளை நடத்ததுவதற்கும் தடை!

## இராணுவத் தளபதி அறிவிப்பு

கொழும்பு, மே 03

தடை விதிக்கப்பட்டுள்ள கூட்டங்கள், விருந்துபசார நிகழ்வுகள் மற்றும் திருமண வைபவங்கள் உள்ளிட்ட நிகழ்வுகளை வீடுகளிலோ அல்லது வேறு இடங்களிலோ நடத்த முடியாது என இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனிடையே, கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை வேறு வீடுகளுக்கு செல்வதையும் உறவினர்களை சந்திப்பதையும் தற்காலிகமாக தவிர்க்குமாறு இராணுவத் தளபதி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரிஷாத்தை விடுதலை செய்யவேண்டும் புத்தளத்தில் நேற்று பெரும் போராட்டம்

புத்தளம்,மே03

**கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மக்கள் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை உடனடியாக விடுதலை செய்யக்கோரி புத்தளத்தில் நேற்றுக்காலை பெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

புத்தளம், கொழும்பு முகத்திடலில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் புத்தளம் மாவட்டத்திலிருந்து ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களும், மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இதில் கலந்து கொண்டு, ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்ய வேண்டும் என்று கோஷங்களை எழுப்பினர்.



சுலோக அட்டைகள் மற்றும் பதாகைகளுடன் சமூக இடைவெளிகளைப் பேணி நின்ற இவர்கள், எங்கள் தலைவனை விடுதலை செய், ரிஷாத் பதியுதீனை ஏன் கைது செய்தாய்? இதற்கான காரணத்தை வெளிப்படுத்து? நீதி செத்துவிட்டதா?' போன்ற கோஷங்களுடன், மிகவும் ஆக்ரோஷமாகவும் உணர்ச்சிவசப்பட்டும் போராட்டத்தை முன்னெடுத்தனர். (எ)



## தரச்சான்றிதழ் நிறுவன தலைவர் நுஷாட் பெரேரா இராஜினாமா!

கொழும்பு, மே 03

இலங்கை தரச்சான்றிதழ் நிறுவனத்தின் தலைவர் நுஷாட் பெரேரா தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

தனியார் நிறுவனமொன்றில் மீண்டும் இணைந்துகொள்ளவுள்ளதால் தான் இராஜினாமா முடிவை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுஷாட் பெரேரா, சதொச நிறுவனத்தின் தலைவராகவும் இதற்கு முன்னர் செயல்பட்டிருந்தார். (எ)

## கொரோனாவுக்கு சிகிச்சையளிக்க ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அரசு அனுமதி

கொழும்பு, மே 03

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார் என இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

நாட்டில்கொரோனா தொற்று வேகமாகப் பரவிவரும் நிலையில், வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பைக் கருத்தில்கொண்டு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ)

## அதிகாரிகள் இருவருக்கு கொரோனா பொலிஸ் பயிற்சி நிலையத்தில் 37 பேர் சுயதனிமைப்படுத்தலில்

கண்டி, மே 03

கண்டி, குண்டசாலையிலுள்ள பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரண்டு பொலிஸார் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியமை உறுதிப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து 37 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்தப் பொலிஸ் பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் தொற்றாளர் ஒருவர் கண்டறியப்பட்ட நிலையில் நேற்று மேலும் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளானதாக கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் பொலிஸ் கடமையில் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் நாடெங்கிலுமிருந்து சுமார்120 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயிற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்த நிலையத்தில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த பயிற்சி நிலையம் மூடப்பட்டு குருநாகலுக்கு பயிற்சியாளர்கள் மாற்றப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் உள்ள நிலையில் மீண்டும் இவ்வாறான பயிற்சிகளை நடத்துவது பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## நுவரெலியாவில் 4 பகுதிகள் முடக்கம்

ஹற்றன், மே 03

நுவரெலியா - வலப்பனை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட நில்தண்டாஹின்ன பகுதி நேற்று முதல் தனிமைப் படுத்தப் பட்டது.

வலப்பனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நில்தண்டாஹின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட 4 பகுதிகள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டன.

இந்தப் பகுதிகளில் பலருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நில்தண்டாஹின்ன முடக்கப்பட்டது. இப்பகுதியிலிருந்து வெளியேறுவதற்கும், உள்ளே வருவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ளவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)



## கொட்டகலையில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் காயம்!



ஹற்றன், மே 03

நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நேற்று முன்தினம் இரவு கொட்டகலை கொமர்ஷல் வங்கிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகினர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோரே இவ்வாறு காயமடைந்து சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

தலவாக்கலை பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற வான் ஒன்று, கொட்டக்கலை பகுதியிலிருந்து கொமர்ஷல் வங்கிப் பகுதியை நோக்கிப் பயணித்த ஓட்டோவுடன்பின்புறத்தில்மோதுண்டு விபத்துக்குள்ளாகியது.

வான், ஓட்டோவுடன் மோதிய பின், ஓட்டோ வீதியை விட்டு விலகி அருகில் இருந்த கற்பாறையுடன் மோதி பலத்த சேதத்துக்குள்ளாகியது.

வான் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பில்மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## சுகாதார நடைமுறைகளுக்கு ஒத்துழைக்காத உணவகம் தனிமைப்படுத்தல்; ஐவர் கைது

வவுனியா,மே 03

வவுனியா கொறவப்பொத்தானை வீதி பள்ளிவாசலுக்கு அருகாமையில்அமைந்துள்ள உணவம் ஒன்று சுகாதாரப் பிரிவினரால் நேற்று முன்தினம் சனிக்கிழமை தனிமைப்படுத்தப்பட்டதுடன், சுகாதார பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

வவுனியாவில் அமைந்துள்ள உணவகங்களில் பணிபுரிபவர்களிடம் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுப்பதற்கும், சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவும் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு வருகை தருமாறு கடந்த இரு தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இந்த உணவகத்தில் பணிபுரியும் சிலர் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு சமுகமளிக்கவில்லை. இந்நிலையில்நேற்று முன்தினம்சனிக்கிழமை சுகாதார பரிசோதகர்களால் இந்த உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது. இதேவேளை, தனிமைப் படுத்தல் செயல்பாட்டை முன்னெடுக்கச்சென்ற சுகாதாரப் பரிசோதகர்களுடன் இந்த உணவகத்தின் ஊழியர்கள் சிலர் முரண்பட்டிருந்தனர். இதனையடுத்து, சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று தெரிவித்து ஐந்து பேர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மயங்கின் அதிரடி வீண்: டில்லி எழுச்சி வெற்றி!



அஹமதாபாத், மே 03

பஞ்சாப் அணியை 7 விக்கெட்களால் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றது டில்லி அணி.

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடந்த போட்டியில் பஞ்சாப் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் ரிஷப் பந்த் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு தலைவர் மயங்க் அகர்வால், பிரப்ஷிம்ரன் சிங் தொடக்கம் கொடுத்தனர். சிங் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்த கிறிஸ் கெய்ல் 13, டேவிட் மலன் 26, தீபக் ஹூடா 1, சாருக் கான் 4, கிறிஸ் ஜோர்தான் 2 என்று ஆட்டமிழந்தனர்.

எனினும் அணித் தலைவர் மயங்க் அகர்வால் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 8 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 99 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில், 20 ஓவர்களும் முடிவுற்றன.

இதனால், 6 விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்களை எடுத்தது பஞ்சாப் கிங்ஸ்.

டில்லியின் பந்துவீச்சில் ரபாடா 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

167 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடியது டில்லி அணி.

பிரித்வி ஷா, தவான் இணை தொடக்கம் கொடுத்தது. 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் என்று அதிரடி காட்டிய பிரித்வி ஷா 22 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஸ்ரீவன் ஸ்மித் பொறுமையாக 22 பந்துகளில் 24 ஓட்டஙகளை எடுத்து வீழ்ந்தார். ரிஷப் பந்த் 14 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

எனினும், 17.4 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 167 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது டில்லி அணி.

சிகர் தவான் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 69 ஓட்டங்களையும், ஹெட் மேயர் 4 பந்துகளில் 2 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 16 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் நாயகனாக மயங்க் அகர்வால் தெரிவானார்.

# பட்லர் அதிரடி சதம்: ராஜஸ்தான் வெற்றி!



டில்லி, மே 03

பட்லரின் அதிரடிச் சதத்தால் ஹைதராபாத் அணியை 55 ஓட்டங்களால் பெரு வெற்றி கொண்டது ராஜஸ்தான்.

ஐ.பி.எல். இருபது - 20தொடரில் நேற்று பகல் நடந்த போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணித் தலைவர் கேன் வில்லியம்ஸன் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தானுக்கு பட்லர், ஜெயஸ்வால் இணை தொடக்கம் கொடுத்தது. ஆரம்பத்தில் மிக நிதானமான ஆட்டத்தை இருவரும் ஆடினர். 13 பந்துகளில் 2 பௌண்ட்ரிகளுடன் 12 ஓட்டங்களை எடுத்த ஜெய்ஸ்வால் ரசீத் கானின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் சஞ்சு சாம்ஸன் அதிரடி காட்டினார். மறுமுனையில் நின்ற பட்லரும் அதிரடியில் மிரட்ட ராஜஸ்தானின் ஓட்ட எண்ணிக்கை வெகுவாக உயர்ந்தது.

39 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களுடன் அரைச்சதம் தொட்ட பட்லர், அதன் பின்னர் விஸ்வரூபம் எடுத்து ஆடினார். அடுத்த 17 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை அடித்தார். இதன் மூலம் 56 பந்துகளில் சதம் அடித்து அசத்தினார் பட்லர்.

இந்நிலையில், 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் அரைச்சதத்தை நெருங்கிய சாம்ஸன் 33 பந்துகளில் 48 ஓட்டங்களை எடுத்து சங்கரின் பந்தில் அப்துல் சமட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மிரட்டிய பட்லர் 64 பந்துகளில் 11 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்களைப் பறக்க விட்டு 124 ஓட்டங்களைக் குவித்து சந்தீப் சர்மாவின் பந்தில் போல்ட் ஆனார்.

இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 220 ஓட்டங்களைக் குவித்தது ராஜஸ்தான் றோயல்ஸ்.

ஹைதராபாத்தின் பந்துவீச்சில் சந்தீப் சர்மா, ரசீத் கான், விஜய் சங்கர் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

221 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய இலக்கை துரத்த ஆரம்பித்தது. ஹைதராபாத். வோர்ணர் களமிறங்காதமையால், அவருக்குப் பதிலாக மனிஷ் பாண்டே தொடக்கம் கொடுத்தார். மறுமுனையில் பெயர்ஸ்ரோ களமிறங்கினார்.

இருவரும் ஓரளவுக்கு சிறப்பான தொடக்கத்தை கொடுத்தனர். பண்டே 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 31 ஓட்டங்களுடனும், 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த வில்லியம்ஸன் 20 ஓட்டங்களை எடுத்து வீழ்ந்தார். பின்னர் வந்தவர்கள் விஜய் சங்கர் 8, கேதார் யாதவ் 19, முஹமட் நபி 17, அப்துல் சமட் 10, ரசீத் கான் 0 என்று ஆட்டமிழந்தனர்.

இதனால் 8 விக்கெட்கள் இழப்புக்கு 20 ஓவர்கள் நிறைவில் 165 ஓட்டங்களையே ஹைதராபாத் பெற்றது.

ஹைதராபாத்தின் சார்பில் பந்துவீசிய ரஹ்மான், கிறிஸ் மொறிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஜோஸ் பட்லர் தெரிவானார்.

# பங்களாதேஷ் தடுமாற்றம்! இலங்கை வலுவான நிலை!!



கண்டி, மே 03

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி 260 ஓட்டங்கள் பின்னிலையில், 177 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறி வருகின்றது.

இலங்கை வந்துள்ள பங்களாதேஷ் அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இரண்டாவது டெஸ்டில் இரு அணிகளும் இப்போது விளையாடி வருகின்றன.

கடந்த 30ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டியில் முதல் இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 493 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி 251 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இரண்டாவது இனிங்ஸில் ஆடிய இலங்கை அணி, கருணாரத்ன 66, தனஞ்சய 41 ஓட்டங்களை எடுத்ததால் 9 விக்கெட் இழப்புக்கு 194 ஓட்டங்களை எடுத்தது.

பங்களாதேஷ் சார்பில் பந்துவீசிய தையுல் இஸ்லாம் 5 விக்கெட்களை கைப்பற்றினார்.

437 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது பங்களாதேஷ் அணி.

தமீம் இக்பால் 24, செய்ப் ஹசன் 34, ஹூசைன் சாண்டோ 26, மொமினுல் ஹகியூ 32, முஸ்பிஹூர் ரஹ்மான் 40 என்று ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

நேற்றைய நாள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 177 ஓட்டங்களை எடுத்தது பங்களாதேஷ் அணி.

லிதொன் டாஸ் 14, ஹசன் மிராஸ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

ரமேஷ் மெண்டிஸ் 3 விக்கெட்களையும், பிரவீன் ஜெயவிக்கிரம 2 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இன்று போட்டியின் இறுதிநாளாகும். வெற்றிபெற வேண்டுமானால் 259 ஓட்டங்களை பெற 5 விக்கெட்கள் மட்டுமே பங்களாதேஷின் கைவசம் உள்ளது. இதனால் போட்டி இலங்கை அணிக்கு சாதகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் (மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-வாராந்த சினிமா தகவல்கள்
06.30 மணி : நலந்தானா-கண்,காது,பல் வைத்திய நிபுணர்-பா.திருமாறன்



7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : யாவரும் கேளீர்

---

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

---

கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

---

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org